மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 2 | மாதமிருமுறை ★ 1-8-53 ★ | இத

உள்நாடு விலை அணா 4

வெளிநா விலை அ

ஆச்சாரியார் ஆட்சியில் முதற் 'பரிசு' ஏந்திய முன்னணி வீரர்

கண்டனக் குறிகள் ★ ★

வரலாற்றுக் காலத்திலிருந்து வட நாட்டுக்கும் தென்னாட்டுக்கும் இடையறாத போர் நடந்தபடி இருக்கிறது. வேறுபட்ட கலாசாரங்கள், பழக்க வழக்கங்கள், மனப்பான்மைகள் ஒன்றையொன்று எதிர்த்து நின்றவண்ணம் இருக்கின்றன. தென்னாட்டை அடிமைப்படுத்த, சிதைத்தொழிக்க வட நாட்டுப் பேரரசுகள் முயன்று பார்த்தன, முடியாமற் போயின. ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கீழ் இரண்டும், வட நாடும், தென்னாடும் ஒன்றுபட்டுக் கிடந்தன. ஆங்கில ஏகாதிபத்தியம் நீங்கியதும், அதன் இடத்தில் வடநாட்டு ஏகாதிபத்தியம் உட்கார்ந்து விட்டது.

தென்னாட்டின் அரசியல் ஏற்பாடுகள் டில்லியில் முடிவு செய்யப்படுகின்றன, தென்னாட்டின் வருமானத்தில் பெரும்பகுதியை செலவிடும் உரிமையை டில்லி ஆட்சி பெறுகிறது. இங்குள்ள தொழில் வளங்களைப் பெருக்க டில்லியின் உத்தரவும் கருணையும் தேவை.

தென்னாட்டின் அரசியல் ஆதிக்கம் வடநாட்டில் இருக்கிறது.

தென்னாட்டின் பொருளாதாரம் வட நாட்டார் கையில் இருக்கிறது.

தென்னாட்டுக் கல்வி முறையில் வட நாட்டு இந்தி நுழைவதுடன், வர்ணாச்சிரம முறையும் நுழையப் பார்க்கிறது. சமூகப் பொருளாதார அரசியலில் தென்னாடு வட நாட்டுக்கும் வர்ணாச்சிரமத்துக்கும் அடிமைப்பட்டிருக்கிறது.

அடிமை நாட்டை நடத்துவது போல்தான் தென்னாடு வடநாட்டால் இழிவாக நடத்தப்படுகிறது.

தென்னாட்டைச் சேர்ந்தவர்களென்றால் வட நாட்டில் கேலி செய்யப்படுகின்றனர்.

இந்த வேதனை நிலையில், டில்லி ஆட்சி முதல்வரான பண்டித நேரு, தென்னாட்டில் நடக்கும் உரிமைப் போராட்டங்களை "நான்சென்ஸ்" என்றும், "சிறுபிள்ளைத்தனம்" என்றும் கேலி செய்தார்.

நம்மை இழித்துரைப்பவர்களுக்கு நமது கண்டனத்தைத் தெரிவிக்கும் முறையில்தான் ஜூலை 14ந் தேதி ரயில் நிறுத்தங்கள் செய்யப்பட வேண்டும் என திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்தது.

அதே போல் வட நாட்டு முதலாளித்துவத்திற்கு நமது எதிர்ப்பைக் காட்டும் அறிகுறியாக கல்லக்குடி போராட்டம் ஆரம்பித்திருக்கிறது.

கல்வித் துறையில் புகுத்தப்படும் வர்ணாச்சிரம திட்டத்தை எதிர்க்கும் அறிகுறியாக சென்னை மறியல் நடத்தப்படுகிறது.

இவையனைத்தும் சமூக, பொருளாதார, அரசியல் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை காண விழையும் திராவிடம் தரும் கண்டன அறிவிப்புகள்.

கண்டன அறிவிப்பு மிக அமைதியான முறையில், வெற்றிகரமாக, நாடெங்கும் நடைபெற்றிருக்கிறது. ஆனாலும் இந்தக் கிளர்ச்சிகளின் நோக்கம் பற்றியும், இலட்சியம பற்றியும் சிலர் வேறு விதமாகப் பேசியிருக்கின்றனர்.

ரயில் நிறுத்தங்களின் மூலம் நமது கண்டனத்தைத் தெரிவிக்க முயன்றோம். அதில் வெற்றி பெற்றோம். இதை விடுத்து, எதிர்ப்பு போராட்டத்துக்கும் ரயிலுக்கும் என்ன சம்பந்தம், ரயிலை நிறுத்துவது சிறுபிள்ளைத்தனம், பலருக்குக் கஷ்டங்களைத் தரும் வகையில் ரயில்கள் நிறுத்தப்பட்டுவிட்டன என்று கிளர்ச்சிக்கு சம்பந்தமற்ற முறையில் எதிர்வாதங்கள் தரப்படுகின்றன. மேலும் ரயிலை நிறுத்தி விடுவதால் காரியங்கள் நடந்து விடுமா வெனவும் சிலர் கேட்டிருக்கிறனர்.

ரயிலை ஒரு நாள் நிறுத்துவதால் மட்டும் எல்லாம் நடந்துவிடுமென தி. மு. க எதிர் பார்க்கவுமில்லை, நினைக்கவுமில்லை.

இன்றைக்கு எழுந்துள்ள கண்டனக் குறிகள் அரசாங்கம் நன்கு உணரவேண்டிய அபாய அறிவிப்புகள். யூகமுள்ள அரசாங்கம் அவற்றை உணர்ந்து திருந்தவேண்டும்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

1-8-53 சனிக்கிழமை

அடக்குமுறையின் எல்லை

ஆச்சாரியார் கொண்டுவந்த ஆரம்பக் கல்வித் திட்டம் நாட்டுக்குக் கேட்டைத் தருவது, சிறுவர்களின் கல்வியறிவைப் பாழ்படுத்துவது என நாட்டின் பலத்த எதிர்ப்பு இருந்தும், எதையும் லட்சியம் செய்யாது, ஆச்சாரியார் தனது வர்ணாச்சிரமக் கல்வித்திட்டத்தைப் புகுத்தியுள்ளார். மிகப் பெரிய திட்டம் ஆனால் யாரையும் கலந்தாலோசிக்காமல் கொண்டுவந்துள்ளார். ஜனநாயகத்தின் முதற் பண்பாடு ஒரு திட்டத்தை எல்லோருக்கும் விளக்கிச் சொல்லி, அதில் பெரும்பாலோருடைய சம்மதம் பெற்றுக் காரியமாற்ற வேண்டும். அப்படி செய்யப்படும் முடிவுகூட சிறுபான்மையோரின் அடிப்படை உரிமைகளைப் பாதிப்பதாகக்கூட இருக்கக் கூடாது. இந்தப் பண்புடன் செயலாற்றுவதே ஜனநாயக முறையாகும். ஆனால் ஆச்சாரியார் தனது திட்டத்தை ஜனநாயகமற்ற முறையில், சட்டசபையையோ, தனது கட்சியினரையோ கலந்தாலோசிக்காமல், தனக்குப் பட்டது என்ற ஒரே காரணத்தால் மிக அவசரமாகக் கொண்டு வந்துவிட்டார். மிகவும் எதேச்சாதிகார முறையில் நடந்து கொள்ளும் ஆச்சாரியார் போக்கைக் கண்டிக்கவும், அவர் கொண்டுவந்துள்ள ஆரம்பக் கல்வித் திட்டத்துக்கு நாட்டிலே உள்ள எதிர்ப்பைத் தெரிவிக்கவும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆச்சாரியார் வீட்டு முன் மறியல் செய்வதென முடிவு செய்தது.

அத்துடன் தென்னாட்டின் செல்வத்தை வடநாடு சுரண்டுகிறது. பொருளாதாரத்தில் தென்னாடு வடநாட்டுக்கு அடிமைப்பட்டிருக்கிறது, அரசியல் ஆதிக்கம் வடநாட்டில் இருக்கிற காரணத்தால் வடநாட்டாரின் வேட்டைக்காடாகத் திராவிடம் ஆகியிருக்கிறது என்பதைக் கண்டிக்கும் முகத்தான் வடநாட்டு முதலாளியின் பேரால் இயங்கும் "டால்மியாபுரம்" என்ற பெயரைக் "கல்லக்குடி" என மாற்ற வேண்டுமெனவும், அதற்கு இசையவில்லையெனில் அதற்காகப் போராடுவதெனவும் திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்தது.

மேலும் தமிழர்களின் உரிமைக் குரலை "நான்சென்ஸ்" என்று வடநாட்டு அதிபர், டில்லி அரசாங்க முதல்வர் நேரு கூறியதற்கு, திராவிடத்தின் எதிர்ப்பையும், கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்ளும் முறையில் ஒரு பகல் மட்டும் ரயில் நிறுத்தங்கள் செய்வதெனத் திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்தது.

இந்த முடிவுகள் மிக அவசரப்பட்டு எடுக்கப்பட்ட முடிவுகளல்ல, பலமான எதிர்ப்புகள் எழுந்தும் அதற்குச் சர்க்கார் செவிசாய்க்க மறுத்த நிலையில், வேண்டுகோள்கள் பல விடுத்தும், கண்டனக் குரல்கள் பல எழுப்பியும், கையெழுத்துக்கள் பல வாங்கியனுப்பியும் இந்த நேர்மையான வழிகளில் அனைத்தும் முயன்றும் பலன் காணாத நிலையில், திராவிட முன்னேற்றக் கழகம் புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை எதிர்த்து ஜூலை 14ந் தேதி மறியலும், வடநாட்டு முதலாளியின் பெயர் ஊர்ப் பெயராக இருப்பதை மாற்ற வேண்டுமென ஜூலை 15 ந்தேதி கல்லக்குடியில் கிளர்ச்சியும், நேருவின் இழி சொல்லைக் கண்டித்து ஜூலை 15ந் தேதி ரயில் நிறுத்தங்களும் தொடங்க இருந்தன.

ஆனால் ஜூலை 13ந் தேதி யன்றே, கழகத்தின் பொதுச் செயலாளர் **அறிஞர் அண்ணா** அவர்களையும், செயற்குழு உறுப்பினர்களான தோழர்கள், **நெடுஞ்செழியன், சம்பத், மதியழகன், நடராஜன்** ஆகியவர்களையும் கைது செய்து அரசாங்கம் சிறைக்குள் தள்ளியது. அவர்களைக் கைது செய்தது பாதுகாப்புச் சட்டத்தின் துணைகொண்டு. தனக்குப் பிடிக்காததை எதிர்க்கும் கட்சியினரைச் சிறைபிடிக்க, இந்திய அரசாங்கம் உபயோகப்படுத்தும் ஆள் தூக்கிச் சட்டம் இதுவேயாகும்.

தலைவர்கள் பிரிக்கப்பட்ட நேரத்திலும், கழகத்தின் கட்டுப்பாடும் அமைதியும் குலையா

மல், எடுக்கப்பட்ட கிளர்ச்சிகள் வெற்றிகரமாக நடந்தேறின. ஜூலை 14 ஆச்சாரியார் வீட்டு முன் மறியலுக்குச் சென்ற கழக வீரர்கள் கைது செய்யப்பட்டனர். அதற்குப் பின் வீரர்கள் அலை அலையாகச் சென்று அறப்போரில் ஈடுபட்ட வண்ணமிருக்கின்றனர்.

ஜூலை 15 தமிழ்நாடெங்கும் ரயில் நிறுத்தங்கள் வெற்றிகரமாக, கண்டோர் எவரும் போற்றத்தக்க வண்ணம் மிக அமைதியான முறையில், நடந்திருக்கிறது. ஆனாலும் ஆச்சாரியாரின் எதேச்சாதிகார சர்க்கார், அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது. அமைதியான முறையில் எதிர்ப்பைக் காட்ட வந்த கழக வீரர்கள் மீதும், அவர்களை ஆதரித்து வந்தப் பொதுமக்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகங்கள், தடியடித் தாக்குதல்கள் நடைபெற்றிருக்கின்றன.

நிராதரவான மக்கள் மீது குண்டுமாரி பொழியப்பட்டிருக்கிறது, ஒரு முறை இரு முறை அல்ல, கல்லக்குடியில் 64 தடவைகள் போலீஸ் சுட்டிருக்கிறது, தூத்துக்குடியில் 30 தடவை சுட்டிருக்கிறது. டையர் ஆட்சியில் சுடுவதற்குத் துப்பாக்கிக் குண்டுகேள் இருக்கும் வரை சுடப்பட்டது. ஆச்சாரியார் ஆட்சியில், சுடப்படுவதற்கு மக்கள் கூட்டம் இருக்கிற வரை சுடப்பட்டிருக்கிறது.

துப்பாக்கிப் பிரயோகத்தால், மண்டையுடைந்தவர்கள், மார்பெலும்பு நொறுங்கியவர், கைகால் இழந்தவர்கள் ஏராளம். பள்ளிக்கூடம் செல்லும் சிறுவனிலிருந்து, தடியூன்றிச் செல்லும் கிழவர் வரை குண்டுகளால் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

பதினொரு பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பதினொரு பேசாத பிணங்கள், பதினொரு அழியாத இரத்தக் கறைகள் தூத்துக்குடியிலும், கல்லக்குடியிலும் இருக்கின்றன.

இரத்த வெறி கொண்டலையும் எதேச்சாதிகார ஆட்சி பதினொரு உயிர்களைக் குடித்து விட்டது. ஆச்சாரியாரின் பஜகோவிந்த ஆட்சி பதினொரு உயிர்களைப் பலி வாங்கியிருக்கிறது.

துள்ளும் காளைகள், குண்டுகளால் துளைக்கப்பட்டு. துடித்து விழுந்து விட்டனர் பிணங்களாக. பிளக்கப்பட்ட இதயத்திலிருந்து பாய்ந்த இரத்தம் மண்ணிலே குழைய, ஒடிந்த கரங்கள் ஊசலாட, உடைந்த மண்டை மண்ணிலே சாய, தாய் தந்தையரை விட்டு, மனைவி மக்களை விட்டு, உற்றார் உறவினரை விட்டு, ஆருயிர்த் தோழர்களையும் அன்புத் திருநாட்டையும் விட்டு அவர்கள் போய்விட்டனர்.

ஆச்சாரியாரின் எதேச்சாதிகார ஆட்சி வலுத்தபடி இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகப் போராட்டங்களில் கலந்து கொண்ட 3000 தோழர்களை சிறையிலே தள்ளி யிருக்கிறது.

கலையுலகச் செல்வர் கருணாநிதிக்கு ஆறு மாதம் கடுங்காவல்.

கவிதைகள் பாடி, இசையின் தாசனாக விளங்கிய கண்ணதாசன் உடலெங்கும், படு காயங்கள்.

தமிழகத்தின் சிறையெங்கும் தலை தாழாச் சிங்கங்கள்.

சென்னை மறியலில் கண்ணீர்ப் புகை.

புகையால் சூழப்பட்டு மறைந்து கிடக்கும் அறப்போர் வீரர்கள் மீது தடி கொண்டு தாக்குதல்.

இன்னும் எவ்வளவு கொடுமைகளைத் தூவ ஆச்சாரியார் தயாராக இருக்கிறாரோ தெரியாது.

அடக்குமுறையை வீசியிருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு எதிராக, திராவிட எழுச்சிக்கு எதிராக, வளர்ந்துவரும் உரிமை உணர்ச்சிக்கு எதிராக, வாழ்வு நம்பும் மக்கள் கூட்டத்துக்கு எதிராக.

கடலலையை நிறுத்தக் கன்யூட் என்ற மன்னன் முயன்றான். கடலலை நிற்கவில்லை, அவனைத் தாண்டிச் சென்றது.

மக்களின் எழுச்சியை நிறுத்த ஆச்சாரியார் முயலுகிறார். ஆனால் அதை அவரால் நிறுத்த முடியாது, அவரைத் தாண்டிச் சென்றுவிடும். அவர் பிடிவாதம் செய்தால் அவரைத் தள்ளி விட்டுச் சென்றுவிடும்.

அமைதியான கடலே யாருடைய கட்டளைக்கும் அடங்குவதில்லை. அதிலும் கொந்தளிக்கும் கடல்முன் நின்று ஒருவன் கோணங்கிக் கூத்தாடினால் அவன் கதி என்னவாகும்?

ஆச்சாரியாருக்குக் கிடைத்துள்ள பலம் வடநாட்டு ஏகாதிபத்தியத்திடமிருந்து,

டில்லி ஆட்சியாளரிடமிருந்து. நமது கழகத்தின் பலம் இந்நாட்டு மக்களிடமிருந்து.

ஆச்சாரியாரால் பாதுகாக்கப்பட வேண்டியவை, வர்ணாச்சிரமதர்மம், வடநாட்டு ஏகாதிபத்தியம். கழகத்தால் உண்டாக்கப்பட வேண்டியவை, சமத்துவ நோக்குடைய சமூகம், சமதர்ம நோக்குடைய அரசியல்.

சுரண்டிப் பிழைக்கும் டால்மியாக்களை ஆச்சாரியார் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. அல்லற்படும் ஏழை மக்களை நாம் காப்பாற்ற வேண்டியிருக்கிறது.

ஆட்சி பீடத்திலே ஆச்சாரியார் அமர்ந்திருக்கிறார், சிறைச்சாலையில் நமது தோழர்கள் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் கையில் துப்பாக்கி யிருக்கிறது, நம் நெஞ்சில் உறுதி யிருக்கிறது.

அவரால் அடக்கு முறையை வீசமுடிகிறது, நாம் கட்டுப்பாட்டுடன் இருக்கிறோம்.

அதிகாரம் ஒரு வகை போதை மருந்து. அதிகார உச்சியை யடைந்தவர்கள் மயங்கிய நிலை யடைந்து விடுகின்றனர், அந்த நிலையில் மலைபோன்ற எதிர்ப்பும் சிறிய அளவிலேதான் தோன்றும். எதிர்ப்பு உண்டானல், அதன் காரணங்களையோ, பின்விளைவுகளையோ ஆராயாது, உடனே அடக்குமுறையை வீசத்தான் முற்படுவார்கள். அதிலும் அதிகாரத்துடன், ஆணவமும் சேர்ந்து விட்டால், எதேச்சாதிகாரம் பிறந்து விடுகிறது. அதன் பின் தன்னை எதிர்ப்பவர்களை எல்லாவிதக் கொடுமைக்கும் ஆளாக்க அதிகாரம் பின்வாங்குவதில்லை. ஆச்சாரியாரும், அதிகாரம் காட்டிவிடுகிற அடக்குமுறைப் பாதைவழியே செல்லுகிறார்.

ஆனல் அடக்குமுறையின் வழி நீண்டதல்ல. திடீரென ஓரிடத்தில் அதற்கு எல்லை தோன்றும், அதைத் தாண்டினல் சரிவான பள்ளத்தில் விழ வேண்டி நேரிடும். ஆச்சாரியார் மிக அவசரமாக அந்த எல்லைக்கோட்டை நெருங்கிக் கொண்டிருக்கிறார்.

கடைசியில் அவர் தோல்வியடைவார், நாம் வெற்றியடைவோம்.

வணக்கமும் பாராட்டுதலும்

—○●○—

திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்த போராட்டங்களில் ஈடுபட்டு மாண்ட மாவீரர்களுக்கு நமது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அவர்களுடைய பிரிவாற்ருமல் துன்புறும் குடும்பத்தினர்க்கும், உற்ருர் உறவினர்க்கும் நமது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக.

கிளர்ச்சிகளில் ஈடுபட்டு கஷ்ட நஷ்டங்களை ஏற்று, அடக்குமுறையின் கொடுமைகளைத் தாங்கி, கழகத்தின் கண்ணியத்தையும் கட்டுப்பாட்டையும் விளங்கச் செய்து, வெற்றி கண்ட வீரர்களை, அவர்களில் பலர் சிறைச்சாலையிலும், ஆஸ்பத்திரியிலும் கிடக்கின்றனர்... அவர்களனைவரையும் பாராட்ட நாமும் நாடும் கடமைப்பட்டிருக்கிறோம்.

தாய்மையும், குழந்தை நலப் பாதுகாப்பும்

[டாக்டர்]

8

குழந்தைக்கு எப்பொழுதெல்லாம் தாய்ப்பால் கொடுக்கக்கூடாது?

(Cantra - Indication to breast feeding)

(1) க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்ட தாய் குழந்தைக்குப் பால் கொடுப்பதால், குழந்தைக்கும் அந்த வியாதி பரவ ஏதுவாக இருக்குமாதலாலும், தாய்க்கும், பால் கொடுப்பதால், உடலிலுள்ள வலிவு மிகவும் குறைந்து விடுவதாலும், அப்படிப்பட்ட தாய் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கக்கூடாது.

(2) நியுமோனியா, டைபாய்டு போன்ற விஷக் காய்ச்சல்களால் கஷ்டப்படும் தாய்மார்கள் குழந்தைக்கு அவசியம் பால் கொடுக்கவே கூடாது.

(3) ரத்தமின்மை (Anoemia) இருதய பலஹீனம் (Heart Disease), வலிப்பு (Epilepsy) மூளைக்கோளாறு (Insanity) முதலியன உள்ள தாய்களும், குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்கக்கூடாது.

(4) குழந்தைக்கு 6 மாதத்திற்கு மேல் ஒரு வருடம் முடிவதற்குள், மீண்டும் தாய் கருவுற்றால், கைக்குழந்தைக்குத் தாய்ப்பால் நிறுத்திவிடுவது நல்லது. (அல்லது கருவில் சிதைவு (Aborition) ஏற்படலாம்)

9

தாய்ப்பால் கொடுக்கப்பட வேண்டிய முறைகள்:-

குழந்தை பிறந்தவுடன் அநேகமாகத் தூங்கிக்கொண்டே இருக்குமாதலாலும், தாயும் குழந்தை பெற்ற களைப்பில் அயர்ந்திருப்பாளாதலாலும், முதல் 12 மணி நேரங்களுக்குத் தாய்ப்பால் அவசியமில்லை.

குழந்தை பிறந்து 6 மணி நேரங் கழித்துக் குழந்தைக்குச் சர்க்கரைத் தண்ணீர் (1 அவுன்ஸ தண்ணீரில் அரை டீ ஸ்பூன் சர்க்கரை என்ற அளவில் கலந்து) அடிக்கடி கொஞ்சங் கொஞ்சமாகக் கொடுக்கலாம். இதில் ஒரு சிட்டிகை உப்பும் சேர்த்துக்கொள்வது நலம்.

12 மணி நேரங் கழித்துத் தாய் தன் முலைக் காம்புகளை ஈரத்துணியால் சுத்தம் செய்து கொண்டு குழந்தைக்குப் பால் கொடுக்க ஆரம்பிக்கவேண்டும்.

முதல் இரண்டு நாட்களுக்குத் தாய்க்குச் சரியாக எழுந்து உட்கார முடியாது. ஆதலால் பால் கொடுக்கும்பொழுது எந்தப் பக்கத்திலிருந்து கொடுக்கிறாளோ அந்தப்பக்கமாகத் திரும்பிப் படுத்துக்கொள்ளவேண்டும்.

தாய் உட்கார ஆரம்பித்த பிறகு, குழந்தைக்குப் பால் கொடுக்கும் போது அவள் நன்றாகச் சாய்ந்து சௌகரியமாக உட்கார்ந்து கொண்டு பால் கொடுக்கவேண்டும்.

மேலும் இடது பக்கம் பால் கொடுக்கும் போது, குழந்தையை இடது கையிலும், வலது பக்கத்தில் கொடுக்கும்போது வலது கையிலும் அணைத்துக்கொண்டு, மற்ற கையினால் முலைக் காம்பு குழந்தையின் வாயில் சரியாக பொருந்தும்படி பிடித்துக்கொண்டு பால் கொடுக்க வேண்டும். அப்படி மற்ற கையால் முலைக் காம்பைப் பிடித்துக் கொடுக்காவிட்டால், முலை குழந்தையின் மூக்கில் அழுந்துவதாலும், அதிகப்பால் குழந்தையின் வாயில் செல்லக் கூடுமாதலாலும், குழந்தைக்கு மூச்சுத் திணறல் ஏற்படும். இது மிகவும் ஆபத்தானது.

சில தாய்களுக்கு முதல் நான்கு அல்லது ஐந்து நாட்கள் வரையிலும் போதுமான அளவுக்குப் பால் பெருகுவதில்லை. ஆகையால் அப்படிப்பட்ட தாயின் குழந்தை தாயிடம் பால் குடித்தும் திருப்தி அடையாமல் அழுது கொண்டே இருக்கும். மேலும் எடையும் அதிகமாகக் குறையும். அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு மட்டும் முதல் வாரத்தில் தாய்ப்பாலோடு கூட வேறு ஏதாவது உணவு (Complementary feeding) கொடுக்க வேண்டியிருக்கும். நன்றாகக் காய்ச்சின பசும்பாலில் இரண்டு பங்கு தண்ணீர் கலந்துகொண்டு, தாய்ப்பால் கொடுத்தபின் குழந்தை அழுதால் மட்டும் இந்தப் பசும்பாலைக் கொஞ்சம்

கொடுக்கவேண்டும். ஒரு வாரங்கழித்த பின்னர் தாய்க்குப் பால் போதுமான அளவு இருக்குமாதலால், பசும்பாலை நிறுத்திவிட வேண்டும்.

பால் கொடுக்கவேண்டிய நேரங்கள்:—

ஆரம்பத்திலிருந்தே பால்கொடுக்கும் நேரத்தைக் கணக்கிட்டு அதன்படி எப்பொழுதும் ஒழுங்காகக் கொடுக்கும் பழக்கத்தைத் தாய் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இது மிகவும் முக்கியம். குழந்தை அழுதாலும், அழுத பொழுதெல்லாம் பால் கொடுப்பது என்பது மிகத் தவருன முறை. ஏனென்ருல் இப்படிக் கொடுத்தால், எவ்வளவு பால் குழந்தைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற கணக்கு தெரியாமற் போவதோடு, குழந்தைக்கு, வாந்தி, பேதி, வயிறு உப்புசம் முதலியன ஏற்பட்டுவிடுகின்றன. மேலும் குழந்தை அழுதால் பசி ஒன்றுதான் காரணம் என்ற முடிவுக்கு வந்துவிடக்கூடாது. காதுவலி, வயிற்றுவலி, மலச்சிக்கல், வயற்றில் உப்புசம், தாகம், கொசு அல்லது மூட்டைக்கடி முதலிய காரணங்களால்கூட குழந்தை அழலாம். ஆகையால் தாய்கள் இவற்றையெல்லாம் ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும்.

மூன்று மணி நேரங்களுக்கு ஒரு முறை பால் கொடுக்கும் முறையைக் கையாளுவது சிறந்தது. இந்த முறையின் படி குழந்தைக்குத் தாய்ப்பால் ஒரு நாளுக்கு 6 முறை (காலை 6 மணி, 9 மணி, பகல் 12 மணி, பிற்பகல் 3 மணி, 6 மணி, இரவு 10 மணி என்ற கணக்கின்படி) கொடுக்கவேண்டும். இரவில் குழந்தை அழுதாலும் பால் கொடுக்கக் கூடாது. ஆனல் காய்ச்சப்பட்டு ஆறின தண்ணீர் கொஞ்சம் கொடுக்கலாம். ஒவ்வொரு முறை பால் கொடுக்கும்போதும், ஒவ்வொரு பக்கமும் 7 நிமிஷங்கள் வீதம் இரண்டு பக்கங்களில் இருந்தும் பால் கொடுக்க வேண்டும். தாயிடம் பால் குடித்துக்கொண்டிருக்கும் குழந்தை தூங்கிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதே போல் தாயும் தூங்கி விடக் கூடாது. ஏனெனில், தாய் தூங்கி விட்டால், குழந்தை மூச்சுவிட முடியாமல், தாயின் உடலும், முலையும் குழந்தையின் வாயையும், நாசித் துவாரங்களையும் அடைத்துவிடக் கூடுமாதலால், குழந்தை இறந்துவிட நேரிடும் - இது எவ்வளவு ஆபத்தானது என்பதை உணருங்கள்.

ஒவ்வொரு முறை பால் கொடுத்த பிறகும், குழந்தையைத் தோளின் மேல் அணைத்துக் கொண்டு, அதன் முதுகை நம் கையால் தட்டி, அது ஏப்பம் விடச்செய்யவேண்டும். பாலோடு கூட சிறிது காற்றும் உட்கொள்ளப்படுவதால், இங்ஙனம் ஏப்பம் விடச் செய்யாவிடில், குழந்தை பால் குடித்து முடித்த பத்து நிமிடங்களுக் கெல்லாம், சிறிது வாந்தி எடுப்பதோடு, வயிற்று வலியின் காரணமாக அழுது கொண்டே இருக்கும். ஆகையால் இந்தச் சிறிய நுணுக்கங்களையெல்லாம் தாய் அறிந்திருப்பது நல்லது.

ஒரு நாளைக்கு ஒரு முறை ஒரு [illegible] அளவு மீன் எண்ணெய்யும், குறைந்த பட்சம் 2 அவுன்ஸ் ஆரஞ்சு பழ ரசமும் ஒவ்வொரு குழந்தைக்கும் கொடுக்க வேண்டும். இதனல் பற்களும் எலும்புகளும் உறுதி பெறுகின்றன. Scurvy, Rickets என்ற சொல்லப்படும் வியாதிகள் தடுக்கப்படுகின்றன.

(தொடரும்)

—[0]—

என்னை நம்பாதவன் என்று அழைத்தாலும் சரி; என்னை நாத்திகன் என்று அழைத்தாலும் சரி; என்னை எப்படி அழைக்க விருப்பமோ அப்படி அழைத்தாலும் சரி; என்னுடைய குழந்தைகள் என் கல்லறையின் அருகில் வந்து நின்று, “இவ்விடத்தில் உறங்குபவர் எங்களுக்கு ஒரு போதும் துன்பம் கொடுத்ததில்லை; இப்பொழுது மண்ணுய் மடிந்திருக்கும் அவர் வாயினின்றும் அன்பற்ற சொல் ஒருபோதும் வந்ததில்லை” என்று உள்ளன்போடு சொல்லும் அளவுக்கு அவர்களை நடத்துவதையே நான் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறேன்.

—இங்கர்சால்

* * *

குழந்தைகள் வாழ்க்கையில் புதிய கவலைகளை அதிகமாக்குகிருர்கள்; ஆனல் பழைய கவலைகளை மறக்கடிக்கிருர்கள்.

—பேக்கன்

* * *

குழந்தை[illegible] வளர்க்கும்போது, அதனுடைய வயதுமுதிர்ந்த நிலையை மனதில் கொள்.

—[illegible]

அறப் போராட்டம்!

அரசியல் - பொருளாதார -
மொழி ஆதிக்கத்தின் அறி
குறியாக நின்ற 'டால்மியா
புரம்' என்ற அவமானச்
சின்னத்தைத் துடைக்க,
வெஞ்சின வீரமொழி
பகன்று,

போர்முரசு கேட்டுப் புலி
யெனப் பாய்ந்து திரண்
டெழுந்து நின்ற வீரர்களை
அணியாக நிறுத்தி,





ஊரார்மகிழ, உற்றார் புடை
சூழ, அகமகிழ்ந்து, அறப்
போர்ப் பண்பு பூண்டு,
புழுதியெழுப்ப, போர்க்
களம் நோக்கிப் புறப்
பட்டுச் சென்று,

மக்கள் திரட்சி!

அவமானச் சின்னத்தை அழகு தமிழ்ப் பெயரான 'கல்லக்குடி'யால் மறைத்து - துடைத்து வெற்றிச் சிறப்போடு மீண்டு,



செருக்கினால், தமிழரின் - திராவிடரின் செயல்களை, 'முட்டாள்தனம்' என்று அடிக்கடி சிறுமொழி புகலும் நேருப் பண்டிதரின் நேர்மையற்றப் போக்கைக் கண்டிக்க, மற்றோர் படை திரட்டி,



நேருவின் கூற்றுக்குக் காரணமாகவும், நேரு ஆட்சியின் நகரும் சின்னமாகவும் இருந்து வரும் புகைவண்டியின் முன்னிலையில் படுத்து, நிறுத்தி, எதிர்ப்பை உணர்த்த,

வெற்றி நமதே!



கொடுங்கோலாட்சியின் அடக்குமுறை அழைக்க, வீரர்களுடன் சிறைக்கோட்டம் நோக்கிச் செல்கிறார், போராட்டப் படைத்தலைவர் நண்பர் மு. கருணாநிதி!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சீரிய சொற்பொழிவாளரும், சிறந்த கலைஞரும், முன்னணி வீரரும், அறப்போர்ப்படைத் தலைவரும் ஆன நண்பர் மு. கருணாநிதி அவர்கள் சிறைப்படுத்தப்பட்டு விட்டார், ஆச்சாரியாரின் அடக்குமுறை ஆட்சியில்!

காவல்! கடுங்காவல்! அதுவும் ஆறு திங்கள்களுக்கு!

கடினமான வேலைகள் செய்யவேண்டுமாம்! கீழ் வகுப்பிலே கிடந்து, வயிற்றுக்குப் பற்றாத கல்லோடு கலந்த களியுருண்டையைத் தின்ன வேண்டுமாம்!

இவ்வளவுக்குப் பிறகு கருணாநிதியின் மனம் மாறும் என்று அரசாங்கம் எண்ணுகிறது! உலகில் தோன்றிய கொடுங்கோலாட்சிகள் பலவும் அப்படித்தான் எண்ணின; முடிவில் ஏமாந்தன—அழிந்தன! ஆனால் ஆச்சாரியார் ஆட்சி அந்த ஏடுகளைப் புரட்டிப் பார்க்க மறந்துவிட்டது; இல்லை, மறுத்துவிட்டது!

கலைஞர் கருணாநிதியும் அவரைச் சார்ந்தோரும் சிறையில்! அவர்களைச் சிறையில் தள்ளிவிட்டதால், அவர்கள் சிந்தனை குலைந்துவிடும் என்று ஆச்சாரியாரின் அடக்குமுறை ஆட்சி எதிர்பார்க்கிறது. ஆனால் அவர்கள் "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எம்மை பாட்டிவிட்டிருக்கும் சிறைச்சாலை" என்றுதான் சிந்து பாடிக்கொண்டிருக்கின்றனர். கொடுமைகள் இழைக்கப்படுகின்றன, அடக்குமுறை ஆட்சியால். ஆனால் அவைகளை இலட்சிய வீரர்களின் கடமையுள்ளம், தூள் தூளாக்கித் தகர்த்தெறிகின்றது என்பதை ஆச்சாரியார் உணரமாட்டார்; கொடுங்கோலர்கள் யாருமே உணர்ந்ததில்லை!

நண்பர் கருணாநிதி புன்முறுவலோடு, கடுங்காவல் தண்டனையேற்றுச் சிறைக்கோட்டம் புகுந்துவிட்டார்! வீரர் குலத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் பேறு பெற்றுவிட்டார்! முதற் பரிசு ஏந்திவிட்டார்!

டால்மியாபுர பெயர் நீக்கப் போராட்டத்தில், முதல் நாளிலேயே கருணாநிதி '**வெற்றி நமதே**' என்று வெற்றிக்கொடி நிலைநாட்டினார்! வாழ்க அவர் சிறப்பு!

அடுத்து ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்துகொண்டு கடமையாற்றினார்; சிறைபிடிக்கப்பட்டார், அவரோடு பலர் சென்றனர்; தொடர்ந்து சென்றுகொண்டிருக்கின்றனர்.

ஆச்சாரியார் வீட்டு மறியலின் காரணமாகவும் பலர் சிறைபுகுந்து வருகின்றனர். திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துள்ள போராட்டங்களில் களம்புகும் தோழர்களுக்குக் கருணாநிதி முன்மாதிரியாக நிற்கிறார்! தழும்பு ஏறிய உடம்பையும், கொடுமைக்கு அஞ்சாத உள்ளத்தையும் கொண்டிருக்கும் நண்பர் கருணாநிதி, சிறைக்கோட்டத்தில் கூண்டிற்குள் புலியெனத்தான் கிடப்பார்! வாழ்க அவர் உள்ளமும் உறுதிப்பாடும்!

பொதுவியல்

உயிரினங்களின் ஆயுட்காலம்

எல்லா ஆணும் பெண்ணும் ஒரு குறிப்பிட்ட வயது வரை நீடித்து வாழ்வார்கள் என்பதை எப்படி வரையறுத்துச் சுட்டிக் காட்ட இயலாதோ, அப்படித்தான் விலங்குகளைப் பொறுத்தும், பறவைகளைப்பொறுத்தும் உறுதியாக வரையறுத்துக் காட்ட இயலுவதில்லை.

ஆனாலும், ஆடவர் - பெண்டிரின் பிறப்பு-இறப்பு நாட்களைப் பதிவு செய்து வைத்துக் கொள்வதால், மனிதன் எவ்வளவு காலம் அதிகமாக நீடித்து வாழமுடியும் என்பதைப் பொதுவாக ஒருவாறு கணக்கிட்டுப் பார்த்துக் கொள்ள முடிகிறது. மனிதன் 100 ஆண்டுக் காலம் வாழலாம் என்பது பொதுவாக அவனி எங்கும் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் மக்களின் சராசரி வயதைக் கணக்கிட்டால் எந்த நாட்டிலும் 100 ஆண்டுகள் என்பது கிடைப்பதில்லை. 100 வயதை எட்டிப் பிடிப்பவர்கள், விரல்விட்டு எண்ணக்கூடியவர்களாகத்தான் அந்தந்த நாட்டில் இருக்கிறார்கள். என்றாலும் மனிதனுடைய வயது 100 என்று ஏற்றுக் கொண்டுள்ளோம். இந்தப்படியே வளர்ப்பு விலங்குகளான ஆடு, மாடு குதிரை, கழுதை, எருமை, பசு, நாய், யானை போன்றவைகளினுடைய வயதையும், வளர்ப்புப் பறவைகளான கோழி, புறா, கிளி போன்றவைகளினுடைய வயதையும் ஒருவாறு கணக்கிட்டுக் கொள்ள முடிகின்றன. மற்ற விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் ஆயுட்காலத்தை உயிர்நூல் - விலங்கு நூல் வல்ல விஞ்ஞானிகள் தொடர்ந்து, கூர்ந்து ஆராய்ந்ததன் விளைவாக ஒருவாறாகக் கண்டறிந்து கூறியுள்ளார்கள்.

நிலத்தில் வாழும் விலங்குகளில், நீடித்த ஆயுட்காலத்தை உடையது என்பதற்காக முதற்பரிசு கொடுக்க முற்பட்டால், அந்தப் பரிசு ஆமைக்குத்தான் போய்ச் சேரும். ஆமை ஏறத்தாழ 350 லிருந்து 400 ஆண்டுக் காலம் நீடித்திருக்கிறது. முதலை 200 ஆண்டுக் காலம் வாழும் தகைமையுடையது என்று கூறுகிறார்கள். யானை வளர்வதற்கு நீண்ட காலம் பிடிக்கிறது. எனினும் அதனுடைய வயது ஏறத்தாழ 100 ஆண்டுகள்தான் என்று கணக்கிடப்படுகிறது. கழுகு நூறாண்டு காலத்திலிருந்து 200 ஆண்டுக் காலம் வரையில் உயிர் வாழக் கூடியது என்று பலர் பல்வேறு வயதுகளைக் குறிப்பிடுகிறார்கள். 'வேல்' என்னும் கடற்பிராணி 500 ஆண்டுக்காலம் வாழக்கூடியது என்று முன்பெல்லாம் கருதப்பட்டது. அண்மையில் கண்ட ஆராய்ச்சிகளின்படி அதன் வயது ஏறத்தாழ 100 என்று தெரியவருகிறது.

கீழே உள்ள அட்டவணையில் விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் நீண்ட ஆயுட்காலம் ஏறத்தாழக் கணக்கிட்டுள்ளபடி கொடுக்கப்பட்டிருக்கிறது. எடுத்துக் காட்டாக நாய்க்கு வயது 15 ஆண்டுகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சில தனிப்பட்ட நாய்கள் 20 ஆண்டுக்காலம் உயிர் வாழ்ந்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றன. மனிதரில் 120, 130 வயதுவரை சிலர் வாழ்ந்து விடுவதுபோல, ஒவ்வொரு விலங்கினத்திலும் சில அப்படி அமைந்து விடுகின்றன என்று கொள்ளவேண்டியிருக்கிறது. கீழே கொடுக்கப்பட்டுள்ள கணக்கில் கருத்து வேறுபாடுகள் இருந்து வருகின்றன என்றாலும், பொதுப்படையாக அறிந்துள்ளவையே இங்கு குறிக்கப்படுகின்றன.

விலங்கு	ஆண்டுகள்	பறவை	ஆண்டுகள்
மூஞ்சூறு	2½	குருவி	3
முயல்	5	கரும்பறவை	12
மான்	8	கோழி	14
செம்மறிஆடு	12	நைடிங்கேல்	18
பூனை	13	புறா	20
ஒட்டைச்சிவிங்கி	14	கொக்கு	24
நாய்	15	மயில்	24
வெள்ளாடு	15	வானம்பாடி	30
அணில்	15	வாத்து	50
குரங்கு	15	பெலிகன்	50
பசு	25	கிளி	60
பன்றி	25	காக்கை	100
குதிரை	30	கழுகு	100
கரடி	35	பருந்து	100
ஒட்டகம்	40	வல்லூறு	100
சிங்கம்	40	**ஊர்வன**	**ஆண்டுகள்**
புலி	40	பச்சோந்தி	5
சிறுத்தை	40	பாம்பு	50
காண்டாமிருகம்	60	முதலை	200
யானை	100	ஆமை	350
மனிதன்	100		

பொறியியல் தோற்றமும் பிரிவும்

○ பொறியியலான் ○

ஆதிகாலத்து மனிதன், இயற்கையில் அமைந்து கிடந்த குகையில் வாழ்ந்து வந்தான். ஆனால் இன்று எழடுக்கு மாடங்களில், எழில்மிகு கூடங்களில், வசதிகள் பல சூழ, உல்லாசமாக வாழ முடிகிறது. அந்த இருண்ட குகையிலிருந்து இந்த எழில் மாடத்துக்கு நீண்ட தூரம்—நீண்ட காலம் இருக்கிறது. இந்த மாறுதலை உண்டாக்கிய ஆற்றலின் வளர்ச்சி என்ஜினியரிங் அல்லது பொறியியல் எனப்படும் துறையைச் சேர்ந்ததாகும். அந்தப் பொறியியலின் பல்வேறு பகுதிகளை விளக்கி இந்தக் கட்டுரை எழுதப் பட்டுள்ளது. கட்டுரை தீட்டிய நண்பர் பொறியியல் கல்லூரியில் பட்டம் பெற்றுச் சிறந்த வல்லுநராகத் திகழ்பவர்.

1. 1. மக்களும் உயிர், மாக்களும் உயிர். ஆனால் மனிதன் ஏன் மிருகங்களை விட ஓர் படி முன்னிலையில் நிற்கிறான்? எழுந்த கேள்வி எளிதன்று விடையிறுத்தற்கு. "முன்னிலை" என்பதே மனித எண்ணத்தில் எழுச்சியுற்ற கருத்து ஒன்றே தவிர வேறில்லை. அதற்கு வேறற்ற (Absolute) அர்த்தம் கிடையாது. அது எவ்வாறாயினும், தற்கால மனிதன் கற்கால மனிதனின் சூழ்நிலையை விட சிறந்ததோர் நிலையில் வாழ்கின்றான் என்பதற்கு ஏனைய ஐயப்பாடுமில்லை. ஆனால் மிருக உலகிலோ இத்தகைய முன்னேற்றம் ஏதும் ஏற்பட்டிருப்பதற்குரிய அறிகுறிகள் நம்மால் சிறிதும் காணமுடியவில்லை. இயற்கையின் பயன்களை முழுவதும் உபயோகித்துக் கொள்ளக்கூடிய திறமை மனித கூட்டத்திற்கு மாத்திரமே அமைந்துள்ளது. இயற்கையின் சக்திகளை அடக்கி ஒடுக்கி, ஆளும் திறமையை நாம் மட்டுமே அடைந்திருக்கிறோம். ஆனால் மிருகங்களோ இயற்கையின் விதிகளுக்கு அடங்கியேயாக வேண்டும். இவ்விதமாக மனிதன் மாத்திரமே எப்படி முன்னேற்றமடைய முடிந்தது என்பதுதான் கேள்வி. இதுதான் விடை: மனிதன் ஓர் சிந்திக்கும் மிருகம். தன்னுடைய வெற்றிகளிலும், இன்பத்திலும், துன்பத்திலும், பொதுவாக, தன்னைச் சார்ந்த நடத்தைகள் யாவற்றிலுமிருந்தும், ஒவ்வொன்றிலுமிருந்தும் அறிவைக் கிரகித்துக் கொள்ள முற்படுகிறான். கிடைத்த ஞானத்தைச் சேர்க்கிறான். பின்பு, அதைப் பல் வேறு முறைகளிலும் பிரித்து, ஆராய்ந்து, இயற்கையின் இரகசியங்களை, இயற்கை இயங்கும் விதத்தை, இனிதே வெளிப்படுத்துகிறான். வெளிப்படுத்தப்பட்ட உண்மைகளை யாவர்க்கும் பகிர்ந்தளிக்கிறான். இம்முறைதான் **விஞ்ஞானம்** (Science) எனப்படும்.

1. 2. விஞ்ஞானம் வெளிப்படுத்தும் அறிவுண்மைகளை, மனிதன், தான் மேன்மேலும் இன்பமுறுவதற்கும், வாழ்க்கையின் கஷ்டநஷ்டங்களை மேலும் குறைத்தொழிப்பதற்கும் உபயோகப்படுத்திக்கொள்ளும் முறையே **பொறியியல்** (Engineering)* எனப்படும். பொறியியல் ஓர் கலை மாத்திரமல்ல; விஞ்ஞானம் போல் ஓர் அறிவுக்களஞ்சியம் மாத்திரமேயுமல்ல. விஞ்ஞானிகள் ஆராய்ந்து சில உண்மைகளை வெளிப்படுத்துவதற்கு முன்னரே, மனிதரில், பொறியியலார் தோன்றியுள்ளனர். பட்டுப்பட்டு, செய்து செய்து, பன்முறை தோல்வியுற்ற பின்னர் வந்த, பழக்க அறிவினால் மட்டுமே பல்வகைக் கட்டிடங்களை நம் முன்னோர் அமைத்துள்ளனர். நீரின் நுட்பங்கள் யாவும் இன்னும் தெரிநதபாடில்லை. ஆயினும் கால்வாய்கள் பல நாம் வெட்டியுள்ளோம். நீர்த்தேக்கங்கள் பல நிறுவிவிட்டோம். இன்றைய விஞ்ஞானிகள் கண்களில் படும் மின்சாரத்தின் தோற்றம், 19-ம் நூற்றாண்டில் தோன்றிய உருவததினும் வெகுவாக மாறுபட்டுள்ளது. ஆயினும், மின்சாரத்தின் பயன்களில் மாத்திரமே கண்ணுள்ள பொறியியலில் இதனால் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் மிகச்சிலவே. மேலும், பொறியியலுக்கும் விஞ்ஞானத்துக்கும் இன்னும் சில வேற்றுமைகளும் உள. உண்மைகளை ஆராய்ந்தறிவது விஞ்ஞானியின் கடன். அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட

---

* "Engineering" என்று தனித்தியங்கும் பொழுது "பொறியியல்" என்றும், "Machanical Engineering" என்ற வார்த்தையிலிருப்பது போல், மற்றொரு பதத்துடன் சார்ந்து நிற்கும் பொழுது "இயல்வகை" என்றும் ஆங்கிலத்திலிருந்து தமிழ்ப் படுத்தப்பட்டிருக்கிறது.

உண்மைகளை மனிதகுலத்துக்கு எவ்வளவு சிக்கனமான முறையில் உபயோகப்படுத்தினால் இன்பம் பெற முடியும் என்று தேர்ந்தறிந்து, அம்முறையில் அவனது திட்டங்களை நிர்ணயித்து, அனுமானித்த திட்டங்களை, பொருள் உருத்தில் (Materially) வெளிப்படுத்துவது பொறியியலாளனின் கடன். இவ்வாறாக, பொறியியலை, விஞ்ஞான அறிவைக் கையாளுவதால் மனிதர்க்கு இன்பம் தரவைக்கும் ஓர் கலையெனக் கூறிவிடலாம்.

1. 3. மனித வரலாறில் பொறியியல் எந்தக் காலத்தில் தோன்றியது என்பதை யாரும் அறுதியிட்டுக் கூறமுடியாது. தீயைக் கண்டுபிடித்தவன் மனித குலத்தின் முதல் விஞ்ஞானியென்றால், தீயில் சமைத்தவனோ அல்லது அதன் வெப்பத்தினால் குளிரைப் போக்கலாம் என்று கண்டு, அவ்விதம் போக்கிக் கொண்டவனோ முதற் பொறியியலான் எனத் திகழலாம். வட்டமான சக்கரத்தைக் கண்டறிந்தவன் மற்றொரு பொறியியலான் ஆவான்; மனிதர் காலத்தின் கற்களைக் கொண்டு வீடமைத்தவனும் பொறியியலானே. மேற்கண்ட காரணங்களால் பொறியியல் தோன்றிய காலத்தைக் குறிப்பாகக் கூறமுடியாது.

1. 4. மனித அறிவு வளர, பொறியியலும், அதன் முக்கியத்துவமும் மேம்பட்டு விசாலமடைந்து கொண்டே வந்தது. அறிவு-மண்டலத்தில், ஓர் பகுதி மிக விரிவடையுங்கால் அதனின்றும் பல் வகைக் கலைகள் தோன்றுவதுதான் இயற்கை. பிரிந்து, பிரிவினையால் ஒன்றுபடுவதே அறிவின் இயற்கை விதி. ஆகையால் பொறியியல் என்ற ஒரே கட்டில் அறிவுக் கதிர் எல்லாவற்றையும் அடக்க முடியவில்லை. பிரிவினை முதற்படியாகப் பின்கண்டவாறு தொடங்கியது. அமைப்பியல் வகை (Civil Engineering), பொறியியல் வகை (Mechanical Engineering), மின்னியல் வகை (Electrical Engineering) என்ற மூன்று கிளைகளே பொறியியல் தருவில் தளிர்த்த முதற்கிளைகள். ஒவ்வொரு கிளையும் மேலும் வளர வளர, அவ்வவற்றின் சிறு கிளைகளும் மேற்பட்டன. அமைப்பியல் வகையானது, கட்டியல் வகை (Structural Engineering), நீரியல் வகை (Hydraulic Engineering), சிற்பியல் வகை (Architectural Engineering), சாலையியல் வகை (Highway Engineering), மண்ணியல் வகை (Soil Engineeriug), சுகாதார இயல் வகை (Sanitory Engineering) எனப் பிரிவுற்றது. பொறியியல் வகையானது. தன்னியங்கி இயல் வகை (Automobile Engineering), பறப்பியல் வகை (Aeronautical Engineering) கடற் பொறியியல் (Marine Engineering), தோற்றுவியல் வகை (Procuction Engineering) என்றும் இன்னும் பலவாகவும் பிரிவுபட்டது. மின்னியல் வகையோ சக்தியியல் வகை (Power Engineering), மின்னியல் வகை (Electronic Engineering) எனக் கிளைவிட்டது, கனியியல் வகை (Miuing), ரசாயனப் பொறியியல் (Chemical Engineering) என்பவை போன்ற புத்தம் புதிய கிளைகளும் தோன்றின.

1. 5. மேற்கண்டவாறு பொறியியல் பிரிவுபட்டாலும் ஒவ்வொரு இயல் வகையும் ஒன்றை ஒன்று துணையாகவுள்ளது. உதாரணமாக நீர்ப்பாசனத்துக்கு, கட்டியல் வகை, நீரியல் வகை, மண்ணியல் வகை, சுகாதார இயல் வகை, சிற்பியல் வகை, மின்னியல் வகை, பொறியியல் வகை, தோற்றுவியல் வகை, ரசாயனப் பொறியியல் முதலிய எல்லாவற்றையும் கையாள வேண்டியிருக்கிறது. சாலைகள் அமைத்தற்கோ மண்ணியல் வகை, சாலையியல் வகை, பொறியியல் வகை போன்றவை அவசியம். மின்சாலை (Power-house) ஒன்று ஏற்படுத்த எண்ணினால், கட்டியல் வகை, நீரியல் வகை, சிற்பியல் வகை, சக்தியியல் வகை பொறியியல் வகை முதலியவை வேண்டும். நவீனப் போர் முறைக்கோ, மேற்கண்ட எல்லா இயல் வகைகளுமே ஒருங்கே உதவுகின்றன. இவ்வாறாக பிரிந்து, பிரிந்து, பிரிந்தபின் ஒன்றி மனித குலத்துக்குப் பணியாற்றி வருகிறது பொறியியல்.

6. ஒவ்வொரு இயல் வகையும்தான் என்ன, அவற்றால் மனிதகுலம் எவ்வாறு பயன் அடைகிறது என்பனவற்றை ஒவ்வொன்றாக எடுத்து பின்வரும் கட்டுரைகளில் விவரிக்கப்படும்.

மன்றம் கட்டண விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7— 8—0
ஆறுமாதம் ,, ,,	3—0—0	3—12—0
தனி இதழ் ,, ,,	0—4—0	0— 5—0

சிறு கதை

வண்டிக்காரப் பையன்

பள்ளிக்கூடத்துப் பியூன் என்னை அழைத்துக் கொண்டு போய் நாலாவது பாரம் அறையில் விட்டான். அப்பொழுது கணக்கு வகுப்பு நடந்து கொண்டிருந்தது. மாணவர்கள் கரும்பலகையிலிருந்த கணக்கைப் பார்த்துப் போட்டுக் கொண்டிருந்தார்கள். கணக்கு வாத்தியார் கணபதி சாஸ்திரிகள் காலை மடித்து வைத்தபடி, வெற்றிலை பாக்கு போட்டுக் கொண்டிருந்தார்.

இன்றும் கணபதி சாஸ்திரிகளைப் பற்றிச் சொல்லும் பொழுது அவருடைய முழு உருவமும் என் மனக்கண் முன் நன்கு வருகிறது. அவருடைய தலை மயிர் பரந்து, கடைசியில் சிறு முடிச்சுடன் ஊசலாடிக் கொண்டிருக்கும், முன் பக்கத்தில் மட்டும் சிறிது தூரம் முழுவதும் சிரைத்து விட்டிருந்தார். நெற்றியில் சந்தனத்தால் மூன்று படுக்கைக் கோடுகள் இருந்தன. பெரும்பாலும் அவர் வாரத்திற்கு ஒரு முறை க்ஷவரம் செய்து கொள்வதால் (அந்த நாள் பையன்களுக்கு ஒரு பயத்தைத் தரும் நாளாக இருக்கும்) அவருடைய கன்னங்களில் வெள்ளை மயிர்கள் செங்குத்துக்கோட்டில் நிற்கும். அவருடைய நீண்ட கருப்புக்கோட் முன் பக்கத்தில் பொத்தான்களிடப்படாமலிருக்கும். அவர்போட்டிருக்கும் சட்டை ஒரே வித நீலக் கோடுகள் போட்டதாக இருந்ததால் அவருக்கு ஒரே ஒரு சட்டைதான் இருக்கிறதென்றும், வாரத்திற்கு ஒரு முறை தோய்த்துப் போட்டுக் கொண்டு வருகிறார் என்றும் மாணவர்கள் கூறிக்கொள்வதுண்டு. அவர் பஞ்சகச்சம் வைத்துக் கொண்டு, வேட்டியின் ஒரு முனையைக் கையில் பிடித்தபடிதான் வருவார். அவர் கையில் எப்பொழுதும் ஒரு விசிறி, வெற்றிலைப் பெட்டி, பிரம்பு, ஒரு நோட்புக் இவைகள் இருந்தபடி இருக்கும். அவர் எப்பொழுதும் வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டேயிருப்பதால், அவர் பேசும்பொழுது அருகே போகப் பையன்கள் பயப்படுவார்கள். அவர் அதட்டினால் மிரண்டு போகாத பையன்கள் கிடையாது. கணக்கிலே அவரைப் போன்ற நிபுணர்கள் இல்லை என்பது பள்ளியில் யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட செய்தியாகும்

இவையெல்லாம் நான் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து கொஞ்ச காலம் ஆனபின்தான் தெரிய வந்தன. ஆதலால் முதல் நாள் நான் எவ்விதக் கவலையும்படாமல், சுற்றும் முற்றும் வேடிக்கை பார்த்தபடி வகுப்பு அறையில் நுழைந்தேன். வெற்றிலைக் காம்பைக் கிள்ளிக் கொண்டிருந்த வாத்தியார் திரும்பி, என்னை ஏற, இறங்க முறைத்துப் பார்த்தார். அவர் பார்த்ததும் எனக்குக் கொஞ்சம் பயம் வந்து, உள்ளே வந்தவன் பின்னால் நகர்ந்து போக ஆரம்பித்தேன். என்னுடைய பயத்தைக் கண்ட பியூன், தன் கையிலிருந்த சீட்டைக் கொண்டுபோய், அவர் கண்ணில் படும்படி வைத்தான். அதில் என்னை நாலாவது பாரத்தில் சேர்த்து விட்டதாகத் தலைமையாசிரியர் தந்த குறிப்பு இருந்தது. நாற்காலியில் சாய்ந்தபடி வாத்தியார் என்னை அருகே வரும்படி கையை அசைத்தார். நான் சட்டை முனையைக் கையால் சரி செய்து கொண்டபடி, பக்கத்தில் போய் நின்றேன்.

"உன் பேர் என்ன ?"

"சுந்தரம்"

"உங்க அப்பா பேர் ?"

"கனகசபைப் பிள்ளை"

கணபதி சாஸ்திரிகள் உதட்டைக் கொஞ்சம் மடித்துக்கொண்டு, இன்னொரு வெற்றிலைக்குச் சுண்ணாம்பு தடவ ஆரம்பித்தார்.

"என்ன வேலை ?"

"தாசில்தார்"

இது வரை அலட்சியமாக என்னைக் கேட்டுக் கொண்டிருந்த வாத்தியார் இப்பொழுது சற்று மரியாதையுடன், சற்று கவனத்துடன் பார்த்தார், ஆமோதிப்பது போல் தலையை அசைத்துக் கொண்டார்.

"எங்கே படிச்சே ?"

"பட்டணத்தில், முத்தியால்பேட்டை ஸ்கூலில்"

பட்டணத்தில் என்றதும் கணக்குப் போட்டுக் கொண்டிருந்த பையன்களெல்லாம் தங்கள் வேலையை நிறுத்தி என்னை உற்றுப் பார்த்

தார்கள். பிறகு வாத்தியார் எனது புத்தகங்களையெல்லாம் வாங்கிப் பார்த்தார். கடைசியாகப் போய் உட்காரச் சொன்னார்.

எந்த இடத்தில் உட்காருவதென்று புரியவில்லை. எல்லாப் பையன்களும் எனக்கு இடந்தர முகமலர்ச்சியுடன் இருந்தார்கள். எனக்குக் கிடைத்த வரவேற்பு கண்டு பெருமையடைந்ததுடன் எந்த இடம் நல்லதெனப் பொறுக்க ஆரம்பித்தேன். இரண்டாவது வரிசையில் ஜன்னலருகே ஒரு பெஞ்சியில் இரண்டு பேர்கள் மட்டும்தான் உட்கார்ந்திருந்தார்கள். அங்கு ஒரு இடம் காலி இருந்தது. அந்ததில் உட்காரத் தீர்மானித்தேன். நான் தேர்ந்தெடுத்ததற்கு பெஞ்சியில் இடமிருந்தது மட்டுமல்லாமல், அந்தப் பெஞ்சியிலிருந்து என்னை அழைத்தப் பையன் நல்ல சில்க் சட்டையணிந்து, ஆடம்பரத்துடன், பணக்கார வீட்டுப் பையனாக இருந்ததும் காரணமாக அமைந்தது எனலாம்.

புதுப்பையனாக இருந்ததால் எனக்கு உதவி செய்யவும், சிநேகம் பாராட்டவும் வகுப்பு மாணவர்கள் எல்லோரும் தயாராக இருந்தார்கள். ஆனால் நாளடைவில், எனது பெஞ்சியிலிருந்த மற்ற இரண்டு பையன்களும்தான், எனக்கு நெருங்கிய நண்பர்களானார்கள். அவர்களுடைய நட்பு அந்த ஊரைவிட்டு நான் போகிறவரை நீடித்து இருந்தது.

எனக்குப் பக்கத்தில் மிக ஆடம்பரமாக இருந்த பையன் ராஜன். அவனுடைய அப்பா சுவாமிநாத ஐயர் அந்த ஊரிலே பிரபல வக்கீல். அவருக்கு ராஜன் ஒரே மகனானதால் மிகச் செல்லத்துடன், அவன் போன போக்கில் வளர்க்கப்பட்டான். ராஜன் இருந்த பங்களா எங்கள் வீட்டுக்கு மிக அருகாமையில் இருந்ததால், நான் பெரும்பாலும் அவனுடைய பங்களாவில் சுற்றிக்கொண்டிருப்பேன். பங்களாவைச் சுற்றிப் பெரிய தோட்டமிருந்தது. அந்தத் தோட்டத்தில்தான் நாங்கள் விளையாடிக் கொண்டிருப்பது.

நாங்கள் இருந்த இடத்திலிருந்து பள்ளிக்கூடம் ஒரு மைலுக்கு மேலிருந்ததால், ராஜனைப் பள்ளிக்கூடத்தில் கொண்டு போய் விட ஒரு வண்டி இருந்தது. அதில் நானும் ஏறிக் கொண்டு போனேன். வழக்கமாக முனுசாமி என்ற வேலையாள்தான் வண்டியை ஓட்டி வந்து காலையில் விடுவான், மறுபடியும் மாலையில் வந்து எங்களை அழைத்துப் போவான். எங்களுடைய பெஞ்சியில் உட்கார்ந்திருந்த மூன்றாவது பையனான வரதன். வண்டிக்கார முனுசாமியின் மகன்.

வரதன் படிப்பிலே மிகவும் கெட்டிக்காரன். அவனிருந்த குடிசை ராஜன் பங்களாவுக்குப் பின்னிருந்த தோட்டத்திலிருந்தது. சிறுவயதிலிருந்தே ராஜனும், வரதனும் ஒன்றாக விளையாடிக் கொண்டிருந்தவர்கள். அப்பா வக்கீல் ஐயாவுக்கு வேலை செய்துவந்தால்; மகன் ராஜன் சொன்னபடியெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான். ராஜனுக்கு வரும் பிரைவேட் வாத்தியார்கள் சொல்லிக் கொடுக்கும்பொழுது வரதனும் பக்கத்திலிருந்து கவனமாகக் கற்றுவந்தான். பின் ராஜனுடன் அவனும் பள்ளிக்கூடத்துக்குச் சென்றான். அவன் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்டது படிக்க வேண்டுமென்பதற்காக அல்ல அங்கு ராஜனுக்கு உதவியாக இருப்பான் என்றுதான் அனுப்பினார்கள். ஆனாலும் வரதன் படிப்பில் ஊக்கங்காட்டி, வகுப்பில் முதன்மை பெறும் அளவுக்கு வந்தான். இது ராஜனுக்கு இன்னும் அனுகூலமாக இருந்தது. வரதன் கணக்குகளைப் போட்டு வைத்தால், ராஜன் சுலபமாக அவற்றைப் பார்த்துப் போட்டு விடுவான். இதனாலேயே வரதனை வகுப்பில் தனக்குப் பக்கத்தில் ராஜன் வைத்திருந்தான்.

காலையில் வண்டி கிளம்புவதற்கு முன்பே வரதன் கிளம்பி, பள்ளிக்கூடத்துக்குப் போய் விடுவான். மாலையில் வண்டியில் நானும், ராஜனும் ஏறிக் கொண்டதும், புஸ்தகக் கட்டை மட்டும் வைத்து விட்டு, வரதன் பின்னால் ஓடி வருவான். வண்டியில் நிறைய இடம் இருக்கும்பொழுது வரதன் மட்டும் ஏன் பின்னால் ஓடி வர வேண்டியிருக்கிறது என்பது எனக்கு அப்பொழுது புரிவதில்லை. நான் வரதனை வண்டிக்குள் வரும்படி அழைத்தாலும், வண்டியோட்டுகிற முனுசாமி கூடவே கூடாது என்று தள்ளி விடுவான். இவ்வளவு கொடுமைக்கார அப்பாவை நான் பார்த்ததில்லை.

ஒரு நாள் வண்டிக்கார முனுசாமி வேறு வேலையாய் அனுப்பப்பட்டு விட்டதால், மற்றொரு வேலைக்காரன் வண்டி யோட்டி வந்தான். இதுதான் சமயமென்று வரதனை நான் வண்டிக்குள் ஏற்றிக் கொண்டேன். வெளியில் தலைகாட்டப் பயந்து கொண்டு, அதே சமயத்

தில் பொங்கி வழியும் சந்தோஷத்துடன் வரதன் உட்கார்ந்திருந்தான். பங்களா கேட் வந்ததும், வரதன் திடீரெனக் குதித்து, தன் குடிசையை நோக்கி ஓடி விட்டான். ஆனால் தற்செயலாக மாடியில் நின்று கொண்டிருந்த ராஜனின் அம்மா, வரதன் வண்டியிலிருந்து இறங்குவதைப் பார்த்து விட்டுப் புதிய வண்டிக்காரனைக் கூப்பிட்டுக் கேட்டார்கள். பின் ராஜனுக்கு வசவு கிடைத்தது. அவன் அதைப் பொருட்படுத்தவில்லை. "ஆ" என்று அலட்சியத்துடன் போய் விட்டான். பின்னால் தங்கியிருந்த நான் அகப்பட்டுக் கொண்டேன். "ஏண்டா, சுந்தரம்! நோக்காவது புத்தி வேண்டாமோ! அந்த வண்டிக்காரப் பையனை உங்களோட ஏண்டா கொண்டு வர்றேள்?" என்று கோபித்துக்கொண்டார்கள். அன்று இரவு முனுசாமி வந்ததும், வக்கீல் நன்றாகத் திட்டினாராம் வரதனின் நடத்தை பற்றி. தான் பெற்ற வசவை யெல்லாம் முனுசாமி வரதனின் முதுகுக்கு மாற்றி விட்டான். அதிலிருந்து வரதன் புத்தகக்கட்டைக்கூட வண்டியில் வைப்பதில்லை. நான் வண்டியில் போக அனுமதிக்கப்பட்டதற்குக் காரணம் "தாசில்தார் ஆத்துப் பையன்" என்பதற்காக.

வரதன் எவ்வளவோ நல்ல பையனாகவும், படிப்பில் கெட்டிக்காரனாகவும் இருந்த போதிலும், வகுப்பிலே அவனை எந்த வாத்தியாருக்கும் பிடிக்காது. அதிலும் கணபதி சாஸ்திரிகள் என்றால் அவன் நடுங்கிக்கொண்டு உட்கார்ந்திருப்பான். அவர் அவனை வரதன் என்று கூப்பிடுவதேயில்லை. "டேய்! வண்டிக்காரப் பையா!" என்றுதான் கூப்பிடுவார். வரதனென்றால் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாக்க அவர் தவறுவதில்லை. அவன் நோட்புக்கில் கொஞ்சம் மைசிந்தியிருந்தால் போதும் "ஏண்டா! ஏண்டா வண்டி மை குழைக்க இந்த நோட்புக்கைப் பார்த்தியா!" என்று சாஸ்திரிகள் ஆரம்பித்து விடுவார். ஆதலால் கணக்கு வகுப்பென்றால் மிக ஜாக்கிரதையாக வரதன் இருப்பான். வீட்டுக் கணக்குகளெல்லாம் சரியாகப் போட்டு விடுவான் இருந்தாலும் கணபதி சாஸ்திரிகள் அவனைக் கண்டிக்காமல் விடுவதில்லை.

ஒரு நாள் வகுப்பில் நுழைந்ததும் கணக்கு வாத்தியார் வரதனைக் கூப்பிட்டார்.

"டேய் வண்டிக்காரப் பையா! வீட்டுக் கணக்குப் போட்டியா!"

"போட்டிருக்கேன் சார்" என்று வரதன் நோட்புக்குடன் எழுந்து நின்றான்.

"என்னடா போட்டிருக்கே! மகா மேதாவி! இங்கே கொண்டா பார்க்கிறேன்."

வரதன் மிகப் பயத்துடன் தனது புத்தகத்தைக் கொண்டு போய் நீட்டினான். அவன் எல்லாக் கணக்குகளையும் போட்டிருந்தான். வாத்தியார் ஏதாவது தப்பு கண்டுபிடிக்கப் பார்த்தார்.

"இந்தக் கணக்குக்கு எங்கேடா வழி போட்டிருக்கே? நீ யாரையோ பார்த்துக் காப்பி அடிக்கிறே!" என்று கணபதி சாஸ்திரிகள் உறுமினார்.

"இல்லே சார்! கணக்குக்கு வழி பக்கத்திலேயே இதோ போட்டிருக்கிறேன்" என்று வரதன் காட்டினான்.

"டேய்! என்னடா கிட்ட வர்றே! எட்டியே நில்லுடா!" என்று பிரம்பால் வாத்தியார் அவனைத் தள்ளினார். அப்பொழுது அவன் சட்டையிலிருந்த பொத்தலைப் பார்த்து விட்டார். "இதென்னடா, போஸ்டாபீஸ்!'! என்று பிரம்பால் அந்த இடத்தைத் தொட்டுக் காட்டினார். பையன்களெல்லாம் சிரித்தார்கள். வரதன் உடல் குன்றிப் போய் நின்றுகொண்டிருந்தான், கணக்குகள் எல்லாம் சரியாகப் போடப்பட்டிருந்ததால் வாத்தியாருக்கு ஒன்றும் தோன்றவில்லை. நோட்புக்கை மூடிக் கொடுக்கப் போனவர், மேலட்டையைப் பார்த்தார். அது மிகவும் கசங்கி அழுக்கேறி இருந்தது.

உடனே மிகத் திருப்தியுடன், "என்னடா இது! கணக்கு நோட்புக் அட்டையா, அல்லது சாணிதட்டுகிற இடமா" என்று நோட்புக்கை வீசி, வகுப்புக்கு வெளியே எறிந்து விட்டார், கணபதி சாஸ்திரிகள்.விழுந்தவேகத்தில்ஏடுகள் பிரிந்து, காற்றில் பறக்க ஆரம்பித்துவிட்டன. எந்த ஏட்டைப் பொறுக்குவதென்று முடியாமல் வரதன் தவித்தான். கடைசியாக எல்லாவற்றையும் சேர்த்துப் பொறுக்கிக்கொண்டு தன்னிடத்திற்கு வந்தான். அவன் குழம்பியிருந்த நிலையில், கணக்கு வாத்தியார் அவனைக் கேள்வி கேட்டார். ஒரு நீண்ட சதுரத்தின் சுற்றளவு எவ்வளவு என்று கேட்டதற்கு, பரப்பளவைச் சொல்லிவிட்டான் வரதன். உடனே கணபதி சாஸ்திரிகளுக்குக் கோபம்

வந்துவிட்டது. பஞ்சகச்சத்தின் முனையை ஒருகையில் பிடித்துக் கொண்டு, எழுந்து வந்துவிட்டார்.

"ஏண்டா! உனக்குச் சுட்டுப் போட்டாலும் படிப்பு வராதே! நீ ஏண்டா இங்கே வந்து என் உயிரை எடுக்கிறே! பேசாம உங்க அப்பன் மாதிரியே வண்டியோட்டுற வேலையைப் பாருடா!" என்று திட்ட ஆரம்பித்து விட்டார்.

வரதனின் கண்களில் நீர்ததும்ப ஆரம்பித்து விட்டது. ஒன்னும் சொல்லாமல் தன்னிடத்தில் உட்கார்ந்தான்.

"என்னடா, உட்கார்ந்துட்டே! வண்டிக்கார மகாராஜு, கொஞ்சம் பெஞ்சு மேலே நின்னுங்க" என்று வாத்தியார் உத்தரவு இட்டார். உடனே வகுப்பிலிருந்த மாணவர்கள் "கொல்" லென்று சிரித்துவிட்டார்கள். மற்றவர்களுடன் சேர்ந்து நானும் சிரித்துவிட்டேன். நான் சிரிப்பதைப் பார்த்ததும், வரதன் கோபத்துடன் என்னைப் பார்த்தான். அந்தப் பார்வை என் உள்ளத்தைக் குத்துவது போலிருந்தது. வெகு நாட்களுக்கு அவன் அவ்வாறு கோபத்துடன் பார்த்தது என் மனதை விட்டு அகலாமல் இருந்தது.

அதே கணபதி சாஸ்திரிகள் பக்கத்திலிருக்கும் ராஜனிடமோ அல்லது வேறு யாரிடமோ வந்தால் குரல் வேறு விதமாக இருந்தது.

"அப்பா! ராஜு! கணக்குப் போட்டியாடா!" என்பார்,

"ஒரு கணக்குப் போடலை" என்று ராஜன் சொல்லுவான், எவ்வித பயமுமின்றி.

"ஏண்டா போடலை! இங்கே கொண்டா! இந்தக் கணக்கா? கொஞ்சங் கஷ்டந்தான்! அது போகட்டும் உன் அத்திம்பேர் வந்தானே அவன் இருக்கானு?" என்று பாடத்தை விட்டு குடும்ப விவகாரங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்து விடுவார்.

"டில்லிக்குப் போயிட்டான் சார்!" என்று ராஜன் பதிலளிப்பான்.

"இந்தா ராஜு! உங்க அப்பாவும் நானும் மன்னார்குடி காலேஜில் ஒன்னு படிச்சவாடா. சுவாமிநாதன்னு வகுப்பிலே முதலில் நிற்பான். உன் அத்திம்பேர் என் கிட்டே படிச்சவன் தான். பத்தாவது பரிட்சையில் அவன்தான் பஸ்ட் எடுப்பான். ஆனால் உன்னைப் பார்த்தா பாப்பார வீட்டுப் பையனுட்டமா இல்லையே! கருத்து, சமத்து இருக்கு! ஆனல் கவனமாகப் படிக்கிறதில்லை" என்று ராஜன் முதுகில் தட்டிக் கொடுப்பார்.

அதற்குப் பின் வரதன் யாருடனும் விளையாடக்கூட வருவதில்லை எப்பொழுதும் புத்தகமும் கையுமாக இருந்தான். ஆனல் அவன் கஷ்டப்பட்ட அளவுக்கு பலன் வராமற் போயிற்று. அவனுக்கு முன்பு இருந்த அளவுக்குத் தன்னம்பிக்கை இல்லாமற் போயிற்று. எவ்வளவு படித்தாலும் தான் படித்தது போதாது என்ற எண்ணம் அவனுக்கு உண்டாக ஆரம்பித்தது. வகுப்பில் சிறு கேள்விகள் கேட்கப்பட்டால் கூட வரதனுக்குத் திகைப்பும், குழப்பமும் உண்டாயின. சம்பந்தமில்லாத பதில்களைக் கொடுக்க ஆரம்பித்தான். அவை இன்னும் அவனைக் கேலிக்கும், சிரிப்புக்கும் ஆளாக்கின. அதிலும் கணபதி சாஸ்திரிகள் வகுப்பென்றல், வரதன் பண்ணுகிற தப்புகளுக்கு அளவில்லாமல் போயின. "உனக்குச் சுட்டுப் போட்டாலும் படிப்பு வரப் போறதில்லை. போய் உங்க அப்பன் மாதிரி வண்டி யோட்டுகிற வேலையைப் பாருடா!" என்று சொல்லத் தவறுவதில்லை.

நாலாவது பாரத்திலிருந்து ஐந்தாவது பாரத்திற்கும் போகும பரிட்சையில், வரதன் சாதாரண மார்க்குகளே வாங்கியிருந்தான்.

ஐந்தாவது பாரத்தில் கணபதி சாஸ்திரிகள் எங்களுக்குப் பாடம் எடுக்கவில்லை. இருந்த போதிலும், வரதன் தான் இழந்த உற்சாகத்தையும், திறமையையும் மீண்டும் பெறவில்லை. சிற்சில சமயங்களில் யாரும் எதிர்பார்க்காத வகையில், மிகக் கடினமான கேள்விகளுக்குத் தகுந்த பதிலளித்து விடுவான். ஆனல் அதே போல் மிகச் சுலபமான கேள்விக்கு, ஒன்றும் விளங்காத நீண்ட பதிலைத் தருவான். அவனுடைய நிலை பரிதாபத்தை உண்டாக்கிய போதிலும் அவனுக்கு நான் என்ன உதவி செய்ய முடியும் என்பது எனக்குப் புரியாமல் இருந்தது.

அந்த ஆண்டு இறுதிப் பரிட்சைகள் முடிந்ததும், என் அப்பாவுக்கு வேலை மாற்றம் ஏற்பட்டு விட்டதால் கோடை விடுமுறையில் நாங்கள் மாற்றப்பட்ட ஊருக்குப் போய் விட்

டோம். அந்தப் பரிட்சையில் வரதன் சரியானபடி மார்க்குகள் வாங்கவில்லை யென்றும், அதனால் மேல் வகுப்புக்குத் தேர்வு கிடைக்கவில்லை யென்றும், ராஜன் எனக்கு எழுதியிருந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தான். ராஜனும், நானும் தேர்ச்சி பெற்றிருந்தோம். என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்து வரதனுக்குக் கடிதம் போட்டிருந்தேன். அதற்கு எனக்கு எந்தப் பதிலும் வராமற் போயிற்று.

பதினைந்து ஆண்டுகள் கழித்து, முன்பு நான் குறிப்பிட்ட கிராமத்துக்குப் போக நேர்ந்தது. ஸ்டேஷனை விட்டு இறங்கியதும், என்னை அழைத்துப் போக வந்திருப்பவருக்காகக் காத்திருந்தேன். ஒருவரும் வராததால், என் சாமான்களை எடுத்துக்கொண்டு வெளியே வந்து ஒரு வண்டியைத் திட்டம் செய்தேன். நான் போக வேண்டிய இடத்தைப் பற்றியும், இருக்கும் தூரத்தைப் பற்றியும் அவனிடம் கேட்டேன். அந்த வண்டிக்காரன் முதலில் அதிகக் கூலி கேட்டான். வண்டிக்காரர்களின் போக்கு எனக்கு நன்கு தெரியுமாதலால், அவன் சொல்லிய கூலியில் பாதி சொன்னேன். நான் கண்டிப்பாகச் சொன்னதால், அவன் அப்படியே அடங்கிவிட்டான். அடங்கிவிட்டான் என்றால் பேசாமல் அப்படியே நின்று கொண்டிருந்தான். சிறிது நேரங் கழித்து "உங்கள் பேர் சுந்தரமா?" என்று கேட்டான். என் பெட்டியின் மேல் இருக்கும் பெயரை அவன் பார்த்து விட்டுக் கேட்கிறான் என நினைத்தேன். "ஆமாம்" எனத் தலைசைத்தேன்.

"என்னைத் தெரியலியா? நான்தான் வரதன்" என்று வண்டிக்காரன் சொன்னான். நான் கேட்பதை என்னால் நம்ப முடியவில்லை. புழுதி யடைந்திருந்த மனத் திரையைத் துடைத்துப் பார்த்தேன். அதில் என்னுடைய பள்ளித்தோழன் வரதனின் உருவம் வந்தது.

அதற்குள் வண்டியில் என்னுடைய சாமான்கள் ஏற்றப்பட்டுவிட்டன. வண்டியில் போய்க் கொண்டிருக்கும் பொழுது, பள்ளி மாணவன் வரதனை, வண்டிக்கார வரதனுடன் ஒப்பிட்டுப் பார்க்க முயன்றும் முடியவில்லை. பள்ளி நினைவுகள் எழுந்ததும், எங்களிருவருடன் படித்த மூன்றாவது கூட்டாளி ராஜனின் ஞாபகம் வந்தது: பத்தாவது படித்த பிறகு அவன் என்ன செய்தான் என்று எனக்குத் தெரியாது.

"ராஜமய்யரைப் பத்திக் கேட்கிறீங்களா? அவர் இப்பொழுது ஒரு வக்கீல். அப்பாவைப் போலவே பிரபல வக்கீலாக வந்து கொண்டிருக்கிறார்" என்று வரதன் சொன்னான்.

வக்கீல் சுவாமிநாத ஐயர் மகனைப் பற்றியும், வண்டிக்கார முனுசாமி பையனைப் பற்றியும் எங்கள் வாத்தியார் கணபதி சாஸ்திரிகள் சொல்லியது கடைசியில் சரியாக நிறைவேறி விட்டன.

ஒவ்வொரு தொழிலும்

நான்கு நண்பர்கள் ஒருங்கு கூடி பேசிக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் ஆசிரியர், இரண்டவது நண்பர் ஒரு வக்கீல், மூன்றாவதாக ஒரு டாக்டர், நான்காவது ஒரு என்ஜினியர் ஆக இருந்தனர். பேசிக்கொண்டிருக்கும் பொழுது ஒவ்வொருவரும் தத்தம் தொழில்களைப்பற்றி பேசினார்கள்.

"நான் சொல்லிக் கொடுப்பதில் தவறு இருந்தால், என் மாணவன் பரீட்சையில் தோற்று விடுவான்" என்று ஆசிரியர் தன் தொழிலைப் பற்றி சொன்னார்.

அதற்கு வக்கீல் "நான் வாதிடுவதில் தவறு வந்தால், என் கட்சிக்காரன் சிறைக்குப் போக வேண்டி நேரிடும்" என்றார்.

"நான் கொடுக்கும் மருந்தில் தவறு ஏற்பட்டால், நோயாளி இறந்து விடுவான்" என்று டாக்டர் சொன்னார்.

இவற்றைக் கேட்ட என்ஜினியர் "நான் கட்டிக் கொண்டிருக்கும் கட்டிடத்தில் தவறு ஏற்பட்டால், அது என் தலைமீதே விழுந்து என்னைக் கொன்றுவிடும்!" என்று முடித்தார்.

புலி உறையும் குகை

தமிழகத்தைச் சார்ந்த சிறு நாடு ஒன்றின் மீது அதன் பகைவர்கள் திடீரெனப் போர் தொடுத்தனர். திடீர்த் தாக்குதலால், எல்லைக் கோடுகளைத் தாண்டிக் கொண்டு எதிரிப்படைகள் உள் நுழைந்து விட்டன. வஞ்சகத் தாக்குதலுடன் நில்லாமல், அந்த நாட்டினரின் வீரத்தைப்பற்றி இழித்தும், பழித்தும் மாற்றார்கள் பேசுகின்றனர் என்ற செய்திகள் வந்தன.

நாட்டைக் காத்து வந்த மறவர் தலைவன் சினந்தெழுந்தான். முரசு அதிர்ந்தது, வீரர்கள் திரண்டனர், விரைந்தனர் களம் நோக்கி, நிறுத்தினர் ஓடி வந்த பகைக்குலத்தை. கடுமையான போர் தொடங்கியது மண்டைகள் பிளந்தன, மத யானைகள் கதறின, அம்புகள் பறந்தன, எதிர்வந்த ஈட்டிக்கு ஈடு கொடுத்து நின்றனர் வீரர்கள்! கடுமையான போர், களம் சிவப்பேறியது, எனினும் வீரர்களின் மனங் குன்றவில்லை. தாயகத்தின் மானங்காத்து நின்றனர்.

நாட்டின் ஒரு புறத்தில் கடுமையான போர் நடந்து கொண்டிருக்கிறது, அதே சமயத்தில் நாட்டின் வேறோர் புறம். அங்கு சண்டைத் தலைகாட்டவில்லை, அமைதி நிலவியது. ஒரு அழகான வீடு. அங்கு வீட்டின் தலைவி, சிறிது முதிர்ந்த வயதினள், உட்கார்ந்திருக்கிறாள் கூடத்தின் ஒரு புறத்தில். அவளைத்தேடி அவளுடைய தோழி ஒருத்தி வருகிறாள். வந்தவள் அழகிய சிற்பங்கள் பதிக்கப்பட்ட தூணைப் பற்றிக் கொண்டு, அதன் அழகைச் சிறிது நேரம் பார்க்கிறாள். பின் வீட்டுக்குத் தலைவியை நோக்கி "உன் மகன் எங்கே?" என்று கேட்கிறாள், பேச்சைத் துவக்க.

அந்தக் கேள்வியைக் கேட்டதும் வீட்டுத் தலைவிக்குப் புன்னகை வருகிறது. தான் கேட்ட கேள்வியில் ஏதேனும் தவறு உளதோ என வந்த தோழி சந்தேகமுறுகிறாள். அதற்கு, வீட்டுக்குடையவள் புன்னகையுடன் பதில் சொல்லுகிறாள். "தோழி! எனது எளிய இல்லத்தின் அழகிய தூணைப் பற்றிக்கொண்டு, 'உன் மகன் எங்கே யிருக்கிறான்?' எனக் கேட்கிறாய். என் மகன் இப்பொழுது எங்கிருப்பானென்பது எனக்குந் தெரியாது அவனைப் பெற்றெடுத்த இந்த வயிறு, புலி உறங்கி விட்டுச் செல்லும் குகை போன்றது. அவன் இப்பொழுது போர்க்களத்தில்தான் இருப்பான், போய்ப்பார்!!' என்று மூதாட்டி பதில் சொல்லுகிறாள்.

வீரக் குடியில் பிறந்த இந்தத் தமிழ் மங்கையின் மறவுரை, புறநானூற்றின் 86 ம் பாடலில் இருக்கிறது. இந்தப் பாடலைப் பாடியவர் காவற்பெண்டு என்ற சங்க காலத்துப் பெண் புலவர். தாய்மையும், வீரமும் ஒன்று சேர அழகிய செய்யுளாயிற்ற. அந்தப் பாடல் வருமாறு.

"சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுளனோவென வினவுதி யென்மகன்
யாண்டுள னாயினும் அறியே னோரும்
புலி சேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே"

(கல்லளை – கல்லாலான குகை)

தன் மகன் நாட்டைக் காக்கும் போருக்குச் சென்றிருக்கிறான். தாய் வருந்திக் கூறவில்லை, பெருமிதத்துடன் கூறுகிறாள்.

அது மட்டுமல்ல, நாடு ஒரு பேராபத்தில் சிக்கியிருக்கிறது, அதை நீக்க மாபெரும் போர் நடக்கிறது என்றால், ஒவ்வொரு ஆண் மகனும் போர்க்களத்தில்தானே இருக்க வேண்டும், வேறெங்கு காணமுடியும் என்றும் கருதுகிறாள்.

புலியை யொத்த வீரமுடையவன் தன் மகன் என்று நினைக்கும் பொழுது பெருமையும், உவகையும் கொள்ளுகிறாள். அவனைப் பெற்றெடுத்த வயிறைப்பற்றி கூறும் பொழுது புலி உறங்கிக் கிடந்த குகை எனக் குறிப்பிடுகிறாள்.

போரெனில் புறமுதுகிடாத வீரர்கள்-புலி நிகர் மாந்தர்கள் தமிழகத்தில் வாழ்ந்தனர். அத்தகைய வீரர்களைப் பெற்றெடுத்தோம் என்று பூரிப்புடன் தாய்மார்கள், அவர்களைப் போர்க்களத்திற்கு அனுப்பினார்கள். தாய்க் குலத்தின் உறுதி தமிழகத்தின்வீரத்தை— மானத்தைக் காத்தது. வீரர்கள்வாழும் நாடு புலி உறையும் குகை போன்றது. அங்கு யாற்றோர் எவரேனும் நுழைந்தால், புலியை இடறுகின்ற குருடனின் கதியை அடைவார்கள்.

ஐம்பதாண்டுத் திட்டம்

பள்ளிக்கூடங்கள் விடுமுறைக்குப்பின் திறக்கப்பட்டன. அவைகள் திறக்கப்படும் சில நாட்களுக்குமுன் வரை சிறுவர்கள் கல்வித்திட்டத்தில் புதியதொரு மாறுதல் வரப்போகிறதென்று யாருக்கும் தெரியாது. புதியதொரு மாறுதல் என்றால் மிகப் பெரிய மாறுதல்—ஆனால் ஆச்சாரியார் இந்த மாறுதலை, நாட்டின் மிக முக்கியமான கல்வித் திட்டத்தில், அதிலும் சிறுவர்கள் கல்வித் திட்டத்தில் தன்னிடம் அதிகாரம் இருக்கிறது என்ற ஆணவப் போக்கில், செய்து விட்டார்.

ஆச்சாரியார் திட்டத்தைக் கொண்டுவரும் பொழுதே சொன்னார், இது வெறும் பெற்றோர்களையோ, பிள்ளைகளையோ பொறுத்த திட்டம் மட்டுமல்ல, சமூகத்தையே மாற்றியமைக்கும் ஒரு புதுமைத் திட்டம் என்றுதான் கொண்டுவரவிருந்த ஆரம்பக் கல்வித் திட்டத்துக்கு அறிமுகம் தந்தார். மேலும் எப்பொழுதும் தம்மை ஒரு பழமை விரும்பி, வர்ணாச்சிரம பக்தர், பிராமணோத்தமர், கீதையின் உரையாளர், உபநிஷத்துக்களின் வியாக்யான கர்த்தா என்று அடிக்கடி வெளிப்படுத்திக் கொள்ளவும், வேறுபடுத்திக் காட்டிக் கொள்ளவும் ஆச்சாரியார் தவறியதில்லை.

ஆச்சாரியார் திட்டப்படி, புதிய தொழில் முறைகள் கற்றுக் கொடுக்கப்படவில்லை, பழைய முறைகள்தான் அதிலும் அவரவர் குலத்தொழில்கள்தான் ஒவ்வொரு மாணவனும் கற்றுக்கொள்ள வேண்டியவை என்று ஆச்சாரியார் திட்டமிட்டுவிட்டார். புதிய தொழில் முறைகளை உண்டாக்கவில்லை, ஆனால் இருக்கும் தொழில்களை வர்ணாச்சிரம முறைப்படி பிரித்துத்தரப் பார்க்கிறார். ஒவ்வொரு குலத்துக்கும், அல்லது ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு தொழிலை ஏற்படுத்திவிட வேண்டும் என்ற திட்டம் நிறைவேறிவிட்டால், வர்ணாச்சிரம தர்மம் நிறைவேற்றப்படுகிறது. அந்த வர்ணாச்சிரம திட்டம் நிறைவேறினால், ஆச்சாரியாரிருக்கும், அவரது முப்புரி குலத்தினருக்கும் சமூகத்தின் முழு ஆதிக்கம் கிடைத்துவிடுகிறது.

இவ்வளவு சூட்சமத்தையும் உள்ளடக்கியிருந்ததால்தான், ஆச்சாரியார் முன்னறிவிப்பு எதுவுமின்றி மிக அவசரப்பட்டு, புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் கொண்டுவந்திருக்கிறார்.

மிக அவசரப்பட்டு, ஆபத்தான முடிவுகளைத் தரும் கல்வித் திட்டத்தைப் புகுத்தியிருக்கிறார் என்று எதிர்ப்பு பலமாகக் கிளம்பியதும், "அவசரப்பட்டுஎடுக்கப்பட்ட முடிவல்ல, ஐம்பதாண்டுகளாக யோசித்து எடுக்கப்பட்ட திட்டம்" என்று ஆச்சாரியார் சமாதானம் கூறியுள்ளார். ஐந்தாண்டுத் திட்டம், பத்தாண்டுத் திட்டம் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் ஆச்சாரியார் திட்டத்தைப்போல ஐம்பதாண்டு காலமாக வேறெவருக்கும் தெரியாமல், தயாரிக்கப்பட்ட திட்டம் வேறெதுவும் இருக்க முடியாது.

இவ்வளவு நீண்ட காலமாக ஆச்சாரியார் மூளையிலேயே சுழன்று கிடந்த அபூர்வத் திட்டம் என்னவென்று பார்த்தால், வர்ணாச்சிரமத்தை நிலைநாட்ட வந்ததைத் தவிர, வேறெதுவும் அதில் புதுமையில்லை. வர்ணாச்சிரம முறை 2000 ஆண்டுகளுக்கு முன்னையது, ஆச்சாரியார் திட்டம் 50 ஆண்டுகளுக்கு முன்னையது. ஆனால் இரண்டும் ஒரே சமூக அநீதிக்குத் தரப்பட்டுள்ள மாறுபெயர்கள். பழைய மதுவை புதிய கோப்பையிலிட்டு ஆச்சாரியார் தருகிறார். புதிய கல்வித் திட்டமெனப் பெயர், அதில் மிக பழமையான வர்ணாச்சிரம முறை மறைந்திருக்கிறது.

வர்ணாச்சிரம முறையில் கல்வியறிவு பார்ப்பனரின் ஏகபோக உரிமையாயிருந்தது. அந்தக் காலத்து படிப்பனைத்தும், வேத, புராண, இதிகாச, உபநிஷத், ஆகம, மனு நூல்களிலிருந்தன. ஆனால் இவற்றையெல்லாம் படிக்கவும், படித்தவற்றைப் பிறர்க்குச் சொல்லிக் கொடுக்கும் உரிமையும் பார்ப்பனர்களுக்கு மட்டுமே "ஆண்டவன் படைப்பிலே" தரப்பட்டிருந்தன. அத்துடன் வாழ்க்கை வசதிகளனைத்தும், உழைப்பின்றி

அவர்களுக்குக் கிடைத்ததால், பார்ப்பனருக்கு ஓய்வு நேரம் கிடைக்க, கல்வியறிவு பெருகுவதற்குத் தகுந்த வாய்ப்புகள் இருந்தன. ஆசிரியர்களும் மாணவர்களும் பார்ப்பனராகவே இருந்தனர்.

ஆங்கில அரசு இந்தியாவில் நிலை நாட்டிய பின், ஆங்கிலக் கல்வி இந்த நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டதுடன், ஆங்கிலக் கல்வி கற்றோரே அரசாங்க உத்தியோகங்களுக்கு எடுக்கப்பட்டனர். ஆச்சாரியார் இன்று ஊராருக்கு உபதேசிப்பதைப்போல, பார்ப்பனர்கள் அன்று தங்கள் குலத்தொழிலைக் கற்றுக்கொள்வதுடன் நிற்கவில்லை. ஆங்கிலக் கல்வியின் அனுகூலங்களைப் பற்றித் தெரிந்து கொண்டதும், பார்ப்பனர் எல்லோருக்கும் முந்திக்கொண்டு ஆங்கிலக் கல்வியைக் கற்கத் தலைப்பட்டனர். பர்ணசாலையில் இருக்கவேண்டியவர்கள் பாதிரிகள் வைத்தப் பள்ளிக்கூடங்களுக்குப் போனார்கள். ரிக் வேதம் ஒப்பிக்க வேண்டியவர்கள், ஷேக்ஸ்பியரின் நாடகங்களைப் படித்தார்கள். புராணங்களைப் புரட்ட வேண்டியவர்கள் பூகோளத்தைப் படிக்க வேண்டியதாயிற்று, இரண்டுக்கும் ஏராளமான முரண்பாடுகள் இருந்ததென்றபோதிலும். உபநிஷத்தைப் படிக்கவேண்டிய நேரத்தில், ரோம் நாட்டு வரலாற்றைப் படித்தார்கள். இதனால், புதிய கல்வி முறையால், மேலை நாட்டினர்தம் கருத்துக்களை வரவேற்றார்கள் என்று சொல்ல முடியாது. உத்தியோகத்துக்காக, அரசாங்க தயவுக்காக பார்ப்பனர்கள் ஆங்கிலத்தைக் கற்றுக்கொண்டனர்.

வர்ணாச்ரம முறைப்படி சமூகத்தில் பார்ப்பனருக்கு உயர்வு கிடைத்ததென்றால், ஆங்கிலக் கல்வியால் அரசாங்கத்திலும் அவர்களுக்கு ஆதிக்கம் கிடைத்தது.

ஐம்பதாண்டுகளுக்கு முன்னரே யோசித்து வைக்கப்பட்ட திட்டம் என ஆச்சாரியார் கூறுகிறார். இந்த ஐம்பதாண்டுகளுக்கு முன்னிருந்து நாட்டின் கல்விநிலை எப்படியிருந்தது என்பதைக் கவனிக்கலாம்.

பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நாட்டு மக்களின் எண்ணிக்கையைக் கணக்கிடும் பொழுது கூடவே கல்விநிலை, ஜாதிப் பாகுபாடுகள், வயது, சொத்து, முதலிய வேறு பல விவரங்களும் சென்ஸஸ் அதிகாரிகளால் சேகரிக்கப்படுகின்றன. அவற்றிலிருந்து நாட்டிலே எவ்வளவு பேர் கல்வியறிவுடையவர்கள் என்ற விவரமும், கல்வியறிவு பெற்றவர்களில் ஒவ்வொரு குலத்திலும் எவ்வளவு சதவிகிதம் என்பதும் கண்டுபிடிக்க முடியும். கீழே காட்டப்பட்டுள்ள பட்டியலில் முதல் கட்டத்தில் நாட்டிலுள்ள மொத்த மக்கட் தொகையில் நூற்றுக்கு எவ்வளவு பேர் கல்வியறிவுடையவர்கள் என்பதைக் காட்டுகிறது. இரண்டாவது கட்டம் பார்ப்பனரில் நூற்றுக்கு எவ்வளவு பேர் கல்வியறிவுடையவர்கள் என்பதைக் காட்டுகிறது. 1901ம் வருஷத்து சென்ஸஸ் கணக்கிலிருந்து 1931ம் வருஷம் வரை விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

கல்வியறிவுடையோர் விகிதம்

	மொத்த மக்கள் தொகை 100-க்கு	பார்ப்பனரில் மட்டும் 100-க்கு
1901 ல்	6	39
1911 ல்	7	42
1921 ல்	8	47
1931 ல்	9	63

(1941 ல் மொத்த மக்கள் தொகையில் 100க்கு 12 பேர் கல்வியறிவு பெற்றவர்கள் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால் சென்சஸ் விவரங்கள் பூராவும் வெளியிடப்படாததால், பார்ப்பனர்களில் கல்வியறிவு பெற்றோர் விகிதம் தெரியவில்லை. ஆனால் 1901 லிருந்து 1931 வரை வந்துள்ள வளர்ச்சியைக்கொண்டு பார்த்தால் 1941 ல் பார்ப்பனரில் உத்தேசமாக 75 லிருந்து 80 சதவிகிதம் வரை கல்வியறிவு பெற்றவர்களிருக்கலாம்.)

மேலே காட்டப்பட்ட புள்ளி விவரங்களில், நாட்டிலே மக்கள் தொகையில் 100க்கு 6, 7, 8, 9 என்று மெதுவாக முன்னேறுகிற நிலையில், பார்ப்பனர் மட்டும் 100க்கு 63 பேர் கல்வியறிவு நிலையிருக்கிறது.

இதில் மற்றொன்று நாம் கவனிக்கவேண்டும். மொத்த தொகையில் படித்தவர்களைப் பார்க்கும்பொழுது, அதில் பார்ப்பனர்களையும் உள்ளடக்கியிருக்கிறோம். பார்ப்பனர்களை எடுத்து விட்டால் பார்ப்பனரல்லாதாரின் படித்தோர் தொகை இன்னும் குறையும். இதை ஒரு உதாரணத்தால் விளக்கலாம். மொத்தம் 100 பேர்கள் இருக்கிறார்கள் என

வைத்துக்கொள்ளுங்கள். இவர்களில் தலைக்குச் சராசரி 9 ரூபாய் பணம் கொடுக்கப்படுகிறது. ஆக மொத்தம் 900 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆனால் அந்த 100 பேர் கூட்டத்தில் 3 பார்ப்பனர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மற்றவர்களை ஏமாற்றி, வஞ்சித்து, ஒரு தடவை வாங்கினவனே இரண்டாந்தடவை வாங்கி, எப்படியோ கடைசியில் பார்த்தால் மூன்று பார்ப்பனரில் ஒவ்வொருவரிடமும் 63 ரூபாய் இருக்கிறது. அதாவது 9 ரூபாய் நியாயமாக இருக்கவேண்டியதற்குப் பதில், 63 ரூபாய்களை அபகரித்துக்கொண்டுள்ளனர். அதிகமாகவுள்ள 54 ரூபாய் பக்கத்திலிருப்பவர்களிடம் குறைந்துவிடும். மொத்தம் இருந்தது 900 ரூபாய். இதில், 3 பேர் மட்டும் ஆளுக்கு 63 ரூபாய் வீதம், 189 ரூபாய்களை எடுத்துக் கொண்டனர். இதனால் மற்றும் இருக்கும் 97 பேருக்கு மீதமிருக்கும் 711 ரூபாய்தான் பங்கு பிரிக்கக்கிடைக்கும். 7 ரூபாயும் மேல் கொஞ்சமும் ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாருக்கும் கிடைக்கும்.

இதே போல் நாட்டின் கல்வியறிவின் நிலை 100க்கு 9 பேர் என்று இருக்கும்பொழுது, பார்ப்பனர் மட்டும் 100க்கு 63 என்று உயர்ந்த விகிதத்தை எடுத்துக்கொள்ளுகிறார்கள். இதனால் பார்ப்பனரை நீக்கிவிட்டு, மற்றவர்கள் கல்வியறிவு 100க்கு 7 ஆகத்தான் இருக்கும்.

இந்தப்படி, பார்ப்பனரை நீக்கி விட்டு மற்றவர்களின் கல்வி நிலைமை 100க்கு எவ்வளவு பேர் என்று பார்த்தால், 1901ல் 5க்கு குறைவு, 1911 ல் 6க்கு குறைவு, 1921 ல் 7க்கு குறைவு, 1931ல் 7க்குச் சற்று அதிகம்.

இந்தப் புள்ளி விவரங்கள் ஆண், பெண் இருபாலாரையும் உள்ளடக்கித் தரப்பட்டிருக்கிறது. ஆண்களையும், பெண்களையும் பிரித்துக் கீழே தரப்பட்டிருக்கிறது.

கல்வியறிவுடையோர் விகிதம்

ஆண்கள் மட்டும்

	மொத்த ஆண்கள் தொகையில் 100-க்கு	பார்ப்பனரில் மட்டும் 100-க்கு
1901 ல்	12	70
1911 ல்	14	72
1921 ல்	15	74
1931 ல்	16	88

பெண்கள் மட்டும்.

	மொத்த பெண்கள் தொகையில் 100-க்கு	பார்ப்பனரில் மட்டும் 100-க்கு
1901 ல்	1	6
1911 ல்	1	12
1921 ல்	2	21
1931 ல்	3	39

இந்த விவரங்களைப் பார்க்கும் பொழுது, ஆண், பெண் இருபாலாரும் பார்ப்பனர்களில் எவ்வளவு வேகமாக முன்னேறுகிறார்கள் என்பது நன்கு தெரியும். 1931 லேயே பார்ப்பனரில் 100க்கு 88 பேர் கல்வியறிவுடையோர்கள். அப்பொழுது நாட்டுநிலை 100க்கு 16 பேர். பார்ப்பனரை நீக்கி விட்டு மற்றவர்களை மட்டும் பார்த்தால் 100க்கு 14 பேர்தான் வரும்.

1931ல் பார்ப்பனப் பெண்களில் படித்தவர்கள் 100க்கு 39 பேர், நாட்டின் நிலை 100க்கு 3 பேர். இன்னும் பார்ப்பனரை நீக்கி விட்டுப் பார்த்தால், பார்ப்பனரல்லாத பெண்களில் 100க்கு 2 பேர்தான் படித்தவர்களாயிருப்பார்கள்.

பார்ப்பனரல்லாத ஆண்கள் மிக உயர்ந்த நிலையில்கூட 100க்கு 14 பேர்தான் 1931ல் இருக்கிறது. ஆனால் அதே காலத்தில் பார்ப்பனரில் ஆண்கள் 100க்கு 88 பேர், பெண்கள் 100க்கு 39 பேர். பார்ப்பனரல்லாத ஆண்களின் கல்வியறிவு, பார்ப்பனப் பெண்களுக்குக் கிடைப்பதிலும் மிகக் குறைந்தது, தாழ்ந்தது.

குலத் தொழில் என்றும், நீண்ட நேரம் படிக்க வைப்பது கொடுமையென்றும் ஆச்சாரியார் இன்று உபதேசம் செய்கிறாரே, அவருடைய குலம் அந்தப்படி நடந்ததா என்றால் இல்லை. ஆண்கள் 100-க்கு 80, 90 என்று ஆங்கிலக் கல்வியைப் படித்தபடி இருக்கின்றனர். அதிலும் வர்ணாச்ரம முறைப்படி, ஆண்கள் படிக்கும் பொழுது பெண்கள் பக்கத்திலிருந்து கேட்பது கூடத் தவறு. அவர்களுடைய வேலைகள், அடுப்பூதுதல், பிள்ளை பெறுதல், கணவனுக்குப் பணிவிடை செய்தல். வேத விதிப்படி பார்ப்பனப் பெண்கள் இருக்கிறார்களா, இல்லை. 100 க்கு 40 பேர் படித்திருக்கின்றனர். இந்த நிலை 1931 ல். இருபதாண்டுகளில் இந்த விகிதம் மிகவும் வளர்ந்திருக்கும்.

இதுவரை பொதுவான கல்வியறிவு நிலை என்பது பேசப்பட்டது. தங்கள் தாய் மொழியில் ஒரு தபால் கார்டைப் படிக்கக்கூடியவன் கல்வியறிவு நிலை பெற்றதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இதைவிட்டு ஆங்கிலத்தில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் விகிதங்களைக் கணக்கிடலாம்.

அரசாங்கத்திலும் மற்ற இடங்களிலும் வேலை பெற, ஆங்கில எழுத்தறிவு மிக முக்கியமானது. ஆங்கிலம் கற்றால்தான் முக்கிய வேலைகள் கிடைக்கும் என்று தெரிந்ததும் பார்ப்பனர்கள் மிக விரைந்து ஆங்கிலங் கற்க முற்பட்டனர். பார்ப்பனர்களின் குலத் தொழில் வேதம் படிப்பது, படிக்கச் செய்வது வேள்வி நடத்துவது, நடத்தச் செய்வது, முதலியவைகளாகும். இவைகளைச் செய்ய வேத மொழியான சமஸ்கிருதமே தேவை. "நீச" மொழியான ஆங்கிலங் கூடாது. ஆனால் ஆங்கிலத்தால் வேலை கிடைக்கிறது என்றதும், நீச மொழியை "நீ, நான்" என்று முந்திக் கொண்டு பயில ஆரம்பித்தனர்.

1901 லிருந்து ஆங்கிலங் கற்றவர்களின் விகிதம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலங் கற்றவர்கள் தொகை மிகக் குறைவாக இருக்குமாதலால், 100க்கு எவ்வளவு பேர் என்று கணக்கிடாமல், 1000 க்கு எவ்வளவு பேர் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. முன்பு குறிப்பிட்டபடி 1941, 51 ம் சென்சஸ் கணக்குகளின் முழு விவரங்கள் கிடைக்காததால் 1931 வரை தரப்பட்டிருக்கிறது.

ஆங்கிலங்கற்றவர்கள்

	மொத்த மக்கள் தொகையில் 1000 பேருக்கு	பார்ப்பனரில் மட்டும் 1000 பேருக்கு
1901 ல்	5	89
1911 ல்	7	112
1921 ல்	9	151
1931 ல்	12	236

இவை ஆண், பெண் இருபாலாரையும் உள்ளடக்கி யிருக்கிறது. இவற்றைப் பிரித்து ஆண், பெண் இவர்களுக்குத் தனித் தனியாகப் புள்ளி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இந்தப் பிரிவுகளின்படி பார்த்தாலும், பார்பனர் எல்லா வகையானும் மேம்பாடடைந்திருப்பது நன்கு தெரியும்.

ஆங்கிலங்கற்றவர்கள்

ஆண்கள்

	மொத்த ஆண்களில் 1000 பேருக்கு	பார்ப்பனரில் மட்டும் 1000 பேருக்கு
1901 ல்	9	179
1911 ல்	12	223
1921 ல்	17	282
1931 ல்	22	448

பெண்கள்

	மொத்த பெண்களில் 1000 பேருக்கு	பார்ப்பன பெண்கள் மட்டும் 1000 பேருக்கு
1901 ல்	1	2
1911 ல்	1	3
1921 ல்	2	13
1931 ல்	3	31

பார்ப்பனரில் பெண்கள் ஆங்கில மொழி கற்கும் அளவு கூடப்பார்ப்பனரல்லாதாரில் ஆண்கள் பயிலவில்லை.

புள்ளி விவரங்கள் வெறும் எண்களை அடுக்கிய தொடர்களல்ல. நாட்டிலே ஐம்பதாண்டுகளாக கல்வி அடைந்துள்ள நிலையை விவரிக்கும் சோகச் சித்திரங்கள். 100க்கு 3 பேராக உள்ள பார்ப்பனர்மட்டும் கல்வித் துறையை தங்கள் ஏகபோக உரிமையாகக் கொண்டுள்ளனர். பொதுக் கல்வி முறையிலும் சரி, ஆங்கில மொழிப் பயிற்சியிலும் பார்ப்பனர்கள், நாட்டு நிலையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது யாரும் நினைக்க முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளனர். அவர்கள் அடைந்துள்ள நிலையை மற்றவர்களும் அடையத் திட்டங்கள் தரவேண்டும். இது நேர்மையும், நீதியும் கொண்ட அரசாங்கத்தின் கடமையாகும். கல்விக்காகச் செலவிடப்படும் பணம் பொதுமக்களின் வரிப்பணத்திலிருந்து எடுக்கப்படுகிறது. வரிப்பணத்தை மக்கள் எல்லோரும் தந்திருக்கும்பொழுது 100க்கு 3 ஆக உள்ள ஒரு சிறு கூட்டத்தினரை மட்டும் 80, 90 சத விகிதத்தில் கல்வியறிவு கொடுத்து விட்டு மற்றவர்களை 10, 15 அளவுகூட கல்வி நிலை கொடுக்கவில்லை யென்றால் அதற்குப் பொருள் என்ன ? ஒரு வகுப்பினரை மட்டும் உயர்த்துவதற்காக உபயோகப்படுத்தப்படும் கருவியாக அரசாங்கம் இருக்கிறதே தவிர, எல்லோருக்கும் பயன் தரும் விதத்தில் அரசாங்கம் அமையவில்லை.

சட்ட மன்றத்தில் சாக்ரடிஸ்

[கிரேக்க நாட்டு ஏதன்ஸ் நகரில், அறிவொளியைப் பரப்பிக் கொண்டிருந்த சாக்ரடிசுக்குக்கிடைத்த பரிசு விஷக்கோப்பை. தனது நாவன்மையால், வாதாடுந் திறமையால், ஏதென்ஸ் நகர இளைஞர்களின் மனதைக் கெடுத்து வருகிறார் என்பதுதான் சாக்ரடிஸ் மீது சாட்டப்பட்டக் குற்றமாகும். அவர் மீது விசாரணை நடந்து குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டு, விஷங்குடித்துச் சாக வேண்டுமெனத் தண்டனையும் தரப்பட்டது. இந்தக் கொடுந்தண்டனையைக் கேட்ட பிறகும் சாக்ரடிஸ் மனந்தளரவில்லை. தன் கட்சியைப் பற்றி விளக்கும் முறையில் நீண்டதொரு வாதத்தைத் துவக்கினார். அந்தப் பேச்சு கீழே தரப்பட்டிருக்கிறது.

அதைப் படிப்பவருக்கு, விஷங் குடித்துத் தான் சாகவேண்டுமென்ற நிலையில்கூட சாக்ரடிஸ் எவ்வளவு அமைதியுடன், உறுதியுடன் தன்னுடைய கருத்துக்களுக்காக நின்றார் என்பது தெரியும். இந்தப் பேச்சுகள் பிளேட்டோ என்னும் கிரேக்க நாட்டுத் தத்துவஞானியால் பாதுகாக்கப்பட்டு அவருடைய புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.

சாக்ரடிஸ் பேச்சு இப்பொழுது துவங்குகிறது. நீங்கள் இருப்பது கி. மு. 399 ல்

பொது நலன்களைக் கவனிக்க வரிப்பணம் தரப்படுகிறது. அந்த வரிப்பணம் நாட்டின் வருவாயிலிருந்து ஒரு பங்காக எடுக்கப்படுகிறது. நாட்டின் வருவாய் மக்கள் உழைப்பிலிருந்து வருகிறது. வயலிலே பாடுபடுவோர், ஆலைகளில் அல்லற்படுவோர், கல்லிலும் முள்ளிலும் வேலை செய்பவர்கள், பூமிக்கடியில் சுரங்கங்களில் உழல்பவர்கள், இவர்கள் இடையறாது பாடுபட்டு வருவாய் தேடித்தந்தனர். வரிப்பணம் சேர்ந்ததும், உழைக்காது இருக்கும் ஒரு சிறு கூட்டத்தினருக்கு கல்வியறிவு புகட்டவும், வேலைகள் தரவும், வாழ்க்கையை வசதியாக ஆக்கவுமே பயன்படுகிறது.

நாம் விதைக்கிறோம், யாரோ ஒரு சிலர் அறுத்தெடுக்கின்றனர்.

நாம் உழைக்கிறோம். யாரோ சிலர் மட்டும் பலன்பெற முடிகிறது.

நாம் வதைப்படுகிறோம், சிலர் மட்டும் வளமாக வாழ்கின்றனர்.

நாம் வரிப்பணத்தைக் கொட்டுகிறோம், சிலர் மட்டும் கல்வியறிவு பெறுகின்றனர்.

இந்தக் கொடுமையின் உச்ச நிலையில்தான், ஆச்சாரியார் அரசோச்சுகிறார், ஆணவத் திட்டங்களைக் கொண்டுவருகிறார், பார்ப்பனரல்லாத சிறுவர்களின் கல்வியறிவை இன்னும் பாழ்படுத்தத் திட்டம் வகுக்கிறார்.

"வயலிலும், சேற்றிலும், சகதியிலும், பாடுபடும் வேலையை நீங்கள் பார்த்துக்கொண்டிருங்கள்; பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் படிக்கும் வேலையை நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம்" என்று ஆச்சாரியார் கூறுகிறார். இதை நன்கு நிலைநாட்ட புதிய கல்வித் திட்டத்தைக் கொண்டுவருகிறார்.

ஆரிய தர்மப்படி, பார்ப்பனர்களே கல்வித் துறையின் உரிமையாளராக இருந்தனர். ஆங்கிலேயர் ஆட்சியிலும் அவர்களே முதன்மை பெற்றனர். இன்றுள்ள வடநாட்டு ஏகாதிபத்தியமும் அவர்களையே முதன்மையாகக் கொண்டுள்ளது. ஆச்சாரியார் ஆட்சிமுறை, பார்ப்பனருக்கு இப்போதுள்ள உரிமை போதாது, வர்ணாச்சிரம முறைப்படி அவர்கள் மட்டுமே படிக்க வேண்டும் மற்றவர்கள் படிக்கக்கூடாது என்று கட்டளையிடுகிறது.

புள்ளி விவரங்கள் சர்க்கார் வெளியீடுகளிலிருந்து எடுக்கப்பட்டவை. நாட்டின் நிலையைத் தெரிவிக்கின்றன. நாட்டின் நிலை திருந்த நம்மவர் கல்வியறிவு பெற, கல்வித் துறையில் பார்ப்பனருக்கு இருக்கும் ஏகபோக உரிமை ஒழிந்து, எல்லோரும் சம உரிமை பெற்று இன்புற்றுவாழ, ஆச்சாரியார் கொண்டுவந்துள்ள ஆபத்தான வர்ணாச்சிரமத் திட்டத்தை மட்டந்தட்ட, அதற்காக ஆச்சாரியார் ஏவிவிடும் கொடுமைகளையும் அடக்குமுறைகளையும் எதிர்த்து வெற்றிகாண நாம் அனைவரும் பாடுபட வேண்டும்.

ஏதன்ஸ் நகர சட்டமன்றத்தில் உங்களைப் பார்த்து சாக்ரடிஸ் பேசுகிறார்; கேளுங்கள்!]

"சட்ட மன்றத் துணையாளர்களே! இந்தக் குற்றச்சாட்டுகள் உங்களிடத்தில் எத்தகைய உணர்வை உண்டாக்கி யிருக்கின்றன என்று எனக்குத் தெரியாது. என் மீது தொடுக்கப் பட்டக் குற்றச்சாட்டுகளைக் கேட்கும் பொழுது, என்னைப் பற்றி நானே மறந்துவிட்டேன். அவர்களுடைய வாதாடுந்திறமை வலிவுள்ளதாக, கேட்போரை முழுவதும் தம்பக்கம் வயப்படுவதாக இருந்தது. இருந்த போதிலும் அவர்கள் கூறியதில் ஒருவார்த்தைகூட உண்மையில்லை.

அவர்கள் சொல்லியவற்றில் மிகப் பெரிய பொய், நான் சிறந்த பேச்சாளியென்றும் என் பேச்சு வண்மையில் யாரும் மயங்கிவிடக்கூடா தென்றும் கூறப்பட்டதாகும். எவரும் கண்டு நாணும் வகையில் அவர்கள் சொல்லியது, நான் பேச ஆரம்பித்தவுடனேயே பொய்யாகிவிடும் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இது அவர்களுக்கும் நன்கு தெரியும். நான் எந்த வகையிலும் பேச்சு வண்மை படைத்தவனல்ல. ஒரு சமயம் உண்மையைக் கூறுவது பேச்சு வண்மை யென்று கருதப்பட்டால், அந்த வகையில் நான் ஒரு சிறந்த பேச்சாளியாகவே இருப்பேன். ஆரம்பத்தில் நான் குறிப்பிட்டதைப்போல, என் மீது குற்றஞ்சாட்டியவர்கள் சொல்லியவற்றில் ஒன்றுகூட உண்மையில்லை. இப்பொழுது நீங்கள் என்னிடமிருந்து உண்மையைச் தெரிந்து கொள்வீர்கள். உண்மையல்லாத வெறெதுவும் வராது. இப்பொழுதே உங்களுக்கு ஒன்று உறுதிபடக் கூற விரும்புகிறேன். என்னுடைய வாதத்தில், பொறுக்கி யெடுக்கப்பட்ட வார்த்தைகளோ, சுழன்று வரும் வாக்கியங்களோ, இருக்காது. சாதாரண மொழியிலேயே நான் பேசுவேன்.

என் பக்கம் நீதி நிற்கிறது என்ற முழு நம்பிக்கையுடன் நான் பேசுகிறேன். இதை எல்லோரும் தெரிந்து கொள்ளவேண்டும். என் வயதடைந்த ஒருவர் உங்களிடம் வந்து ஒரு ஆரம்பப் பேச்சாளியைப் போல, ஆவேசச் சொற்களில் என் வாதங்களைத் தர முடியாது. சாதாரண சொற்களில், நான் உங்களில் பலருடன் சந்தைக் கடைகளிலும், தெரு முனைகளிலும் உரையாடிக் கொண்டிருந்த எளிய நடையில்தான் பேசப் போகிறேன். இதைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படக் கூடாது. இந்தத் தள்ளாத வயதில், முதல் தடவையாக சட்ட மன்றம் ஒன்றில் நிற்கிறேன். ஆகவே, வழக்கமான சட்ட நுணுக்கங்களோ, சட்ட மன்ற முறைகளோ எனக்குத் தெரியாது. வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவன் தன் தாய் மொழியால், தனக்குத் தெரிந்த வகையில் வாதாடினால் எப்படி நடந்து கொள்ளுவீர்களோ, அதே மாதிரி என்னையும் ஏற்றுக் கொள்ளுங்கள். நான் வாதங்களைத் தரும் முறை உங்களுக்குப் புதிதாக இருக்கலாம். அது நல்லதாகவோ, மோசமானதாகவோ அமையலாம். ஆனால் அதைப் பற்றிக் கவலைப் படாமல், நான் கூறுவது நேர்மையானதா அல்லவா என்பதை நீங்கள் ஆராயவேண்டும். ஆதலால், இதைக் கவனித்து நடந்தால், நீதிபதிகளே நீங்கள் உங்கள் கடமையைச் செய்தவர்களாவீர்கள், உண்மையைத் தெரிவிக்கும் முறையில் பேசினால், நான் என் கடமையைச் செய்தவனாவேன்.

நான் என் கட்சியைத் துவக்குமுன், என்னைப்பற்றி ஊரிலே உலவும் ஆதாரமற்ற பழிச் சொல்லுக்கு பதில் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். எனக்கு எதிரான பழிச் சொற்கள் மிக நீண்ட காலமாக இருந்து வருகின்றன. எனக்கு எதிராகப் பரப்பப்பட்ட தப்பு எண்ணங்கள் பலப்பல. இன்று சட்ட மன்றத்தில் என் மீது குற்றஞ்சாட்டியவர்களை விட அவ்வாறு தவறான வதந்திகளைப் பரவச் செய்தவர்களே என் எதிரிகளாக விளங்குகிறார்கள். உண்மைக்கு நிற்காத அந்த வதந்திகளே, ஊரில் என் பெயரை மாசுபடுத்திய வண்ணம் இருந்தன. "அந்த சாக்ரடிஸ் இருக்கிறானே, தெரியுமா! அண்ட சராசரங்களையும் ஆராய்ந்தவன் போலப் பேசுவான். அவன் வாதத்தில் கருட்பு வெள்ளைபோலத் தோன்றும், வெள்ளை கருப்பாக மாறும்" என்று என் மீது பரப்பப்பட்ட வதந்திகளே என் எதிரிகளாயின.

ஏதன்ஸ் நகரக் கடவுள்களிடம் நம்பிக்கை யற்றவன் என்ற குற்றச்சாட்டே மிகப்பலமானதாகும். இவ்வாறு என்னைப் பற்றி குற்றஞ்சாட்டுபவர்கள் மிகப்பலர், நீண்டகாலமாக வேலைசெய்து வருகின்றனர். உங்களுடைய குழந்தைப் பருவத்திலேயே, இப்பொது இருப்பதைவிட ஆராயுந்திறன் குறைந்திருந்த நிலையில் உங்களுடைய மனதில் இந்த எதிர்ப்பு எண்ணங்களை வேரூன்றச் செய்து விட்டார்

அவற்றைப்பற்றி அதிகம் பேசாது விடுக்கின்றேன். முன் நான் குறிப்பிட்டதைப்போல பலரின் விரோதத்துக்கு நான் ஆளானேன். இதுதான் என்னைத் தண்டனைக்குத் தள்ளியிருக்கிறது. என்னைப் போலவே, இதற்கு முன் பலர் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள், எதிர்காலத்தில் பலர் தண்டிக்கப்படக்கூடும். இதை வைத்துக்கொண்டு சிலர் என்னைப் பார்த்துக்கூறலாம், "சாக்ரடிஸ்! இவ்வளவு தெரிந்திருந்தும், சாவுத் தண்டனை பெறவேண்டிய ஆபத்துக்கு உன்னையே ஏன் ஈடுபடுத்திக் கொண்டாய்?" என்று. அதற்குப் பதிலாக நான் கூறுவது "வாழ்வு அல்லது சாவு, இவைகளை வைத்துக்கொண்டு ஒரு செயலை நாம் மதிப்பிடக்கூடாது. நாம் செய்கிற செயல் சரியானதா அல்லது தவறானதா, என்று பார்க்க வேண்டும்," என்பதாகும்.

ஒரு போர் வீரனைப் படைத்தளபதி களத்தில் ஒரு இடத்தில் நிறுத்துகிறான் என்றால், அவன் எத்தகைய ஆபத்துக்களையும் தாங்கிக்கொண்டு அந்த இடத்திலேயே இருக்கவேண்டும்; சாவோ, அதைவிடக் கடுமையான அவமானமோ அவன் உறுதியை மாசுபடுத்தக் கூடாது.

நான் போர்வீரனாக இருந்து, கிரேக்கப் படையில் பொட்டிடே, ஆம்பிபாலிஸ், டெலியம் என்ற களங்களில் பணியாற்றிய பொழுது, தளபதி என்னை நிறுத்திய இடத்திலேயே நின்று போராடினேன்.

நீங்கள் என்னை விடுவித்துவிட்டால் கூட: என் கருத்துக்களை மாற்றிக் கொள்வேன் என்றோ, என் செய்கைகளைத் திருத்திக் கொள்வேன் என்றோ எதிர்பார்க்க வேண்டாம். "சாக்ரடிஸ்! இந்தத் தடவை உன்னை நாங்கள் விட்டு விடுகிறோம்; ஆனால் ஒரு நிபந்தனை. இனிமேல் நீ அறிவாராய்ச்சிகள் செய்வதோ, தர்க்கம் நடத்துவதோ கூடாது. அப்படிச் செய்தால் நீ இறக்கவேண்டி நேரிடும்" என்று நீங்கள் சொன்னால் "ஏதன்ஸ் நகர மக்களே! உங்களிடம் நான் மதிப்பு கொண்டவன், உங்களை உள்ளன்புடன் நேசிப்பவன். என் வாழ்வு முடிகிறவரை, என் சித்தாந்தங்களை மாற்றிக்கொள்[...] அல்லது 'உண்மைகாண முயல[...]ப் பண்படுத்த வேண்டும்' [...] கிற ஒவ்வொருவரையும் [...]த் திக் கொள்வதோ இரு[...]ல் நீங்கள் எனக்குச் சாவோ அ[...]வா தண்டனையோ அல்லது விடுதலையோ, எதைத் தந்தாலும், இதை நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள், பல தடவைகள் நான் இறக்கவேண்டியிருந்தால் கூட, என்னுடைய போக்கை நான் மாற்றியமைத்துக் கொள்ள மாட்டேன்.

என்னைக் கொல்வதால் எனக்குத் தீங்கு விளைவிக்கப்படவில்லை. உங்களுக்கே பெருந் தீங்கை விளைவித்துக்கொள்ளுகிறீர்கள். நான் வாதிடுவது எனக்காக மட்டுமல்ல. உங்களுக்காகவும்தான், நீங்கள் ஒரு அநீதியை இழைக்கக் கூடாது என்பதற்காக.

நான் சாவதற்கு வருத்தப்படவில்லை. நான் சாக வேண்டுமென்று நீங்கள் கொடுத்த தண்டனை எனக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. ஆனால் எனக்குச் சாதகமாகக் கிடைத்த ஓட்டுக்களின் எண்ணிக்கை எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. இன்னும் முப்பது ஓட்டுகள் அதிகம் கிடைத்திருந்தால் நான் விடுதலையாயிருப்பேன்.

நான் இறந்து போவதற்கு முன் உங்களுக்கு ஒன்று கூற விரும்புகிறேன். என்னைக் கொன்று விடுவதால், அதற்கான தண்டனை என் சாவுக்குப்பின் உங்களுக்குக் கிடைக்கும். என் சாவைவிட அது அதிகக் கடுமையானதாக இருக்கலாம். நான் போய் விட்டால், உங்களைப் பற்றிக் கேட்பவர்கள் யாரும இருக்கமாட்டார்கள் என்று நினைக்க வேண்டாம். உங்கள் போக்கை அதட்டிக் கேட்பவர்கள் மிகப்பலர் இருப்பார்கள். நான் பலரை அடக்கி வைத்திருக்கிறேன். நான் போனதும், அவர்கள் கடுங்கோபத்துடன் உங்கள் மீது திரும்புவார்கள், அவர்கள் இளைஞர்களாதலால். வீணான தொந்தரவுகளுக்கு ஆளாவீர்கள்.

நான் செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது. நான் இறக்கப் போகிறேன், நீங்கள் வாழப் போகிறீர்கள். இதில் எது சிறந்தது என்று இங்குள்ள யாருக்கும் தெரியாது"

[சாக்ரடிஸ் பேச்சு முடிந்ததும், சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பின் அங்கு நஞ்சு கொடுக்கப்பட்டது; அதை உண்டு மாண்டார், மனிதனின் மாண்பை நிலை நாட்ட. அவர் சட்ட மன்றத்தில் நிகழ்த்திய பேச்சு மிக நீ[...]து. [...]த்தாழ புத்தக வடிவில் நாற்பது பக்கங்களுக்கு மேல் வரும். அதில் சில முக்கிய பகுதிகளை மட்டும் எடுத்து மேலே கொடுக்கப்பட்டிருக்கி[...].]

கள். நீங்களும் நம்ப வேண்டியதாயிற்று. ஏனெனில் என் பக்கத்தை எடுத்துச் சொல்ல, உங்களருகில் எவருமே இருந்ததில்லை.

எனக்கு எதிராக இருப்பவர்கள் மிகப்பலர். அவர்களுடைய இழிச் சொற்களுக்கும் தூற்றுதலுக்கும் முடிவாகப் பதில்கள் தருவதென்பது முடியாத காரியம். தாங்கள் கூறுவதை முழு நம்பிக்கையுடன், முழு முயற்சியுடன் அவர்கள் பரப்புகிறார்கள். அவர்களனைவரையும் நான் குறுக்கு விசாரணை செய்யமுடியாது, திருப்பிக் கேள்விகள் கேட்க முடியாது. காலியாக் இருக்கும் சாட்சிக் கூண்டைப் பார்த்து, நிழல்கள்போல என்னை மறைக்கிற வாதங்களைப்பற்றி, நான் பேசவேண்டியிருக்கிறது. மிகப் பல ஆண்டுகளாக என் மீது பரப்பப்பட்ட குற்றச்சாட்டுகள்; அவற்றையெல்லாம் சில மணி நேரங்களில் பேசி, உங்கள் மனதிலிருந்து அகற்றவேண்டும். இந்தக் கடினமான முயற்சியில் நான் வெற்றியடைந்தால், எனக்கு மட்டுமல்ல, அது உங்களுக்கும் நன்மை பயப்பதாகும்.

என்மீது கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படைதான் என்ன? இந்தச் சட்ட மன்றத்தில் என் மீது குற்றஞ் சாட்டியவரின் குற்றப்பத்திரிக்கையை ஆராய்ந்தால், "சாக்ரடீஸ் ஒரு கலகவாதி, உண்மையை மறைத்துப் பொய்களைப் பேசுகிறான், மற்றவர்களுக்கும் அவற்றைக் கற்பிக்கிறான், இதனால் நாட்டின் சட்ட திட்டங்கள் மீறப்படுகின்றன" என்ற வாதமே மிகும். அரிஸ்டோபேனஸ் என்பவர் எழுதிய நாடகமொன்றில் நான் அவ்வாறு கேலி செய்யப்பட்டிருக்கிறேன். நான் பேசுபவைகளை உங்களில் பலர் கேள்விப்பட்டிருப்பீர்கள். இவர்கள் குற்றஞ்சாட்டுவதுபோல குறைகள் அவற்றில் இருந்தனவா என நீங்கள் ஒருவரையொருவர் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

"சாக்ரடீஸ்! இந்தக் குற்றச்சாட்டுகள் ஏன் உன்மீது வந்தன? நீயும் மற்றவர்களைப் போல இருந்திருந்தால், உன்மீது ஏதும் வந்திருக்க நியாயமில்லை. நீ ஏதோ பெரிய குற்றம் செய்திருக்கவேண்டும். அந்தக் குற்றம் என்னவென்று தெரிந்தால் நல்லது" என்று நீங்கள் கேட்கலாம்.

"சாக்ரடீஸ் ஒரு அறிஞன்" என்ற வாசகத்தை உங்களில் பலர் கேட்டிருப்பீர்கள்.



நீதிக்காக வாதாடிய சாக்ரடீஸ்

டெல்பிக் என்ற கோயிலில் சொல்லப்பட்ட இந்த வதந்தி என் காதுகளுக்கு எட்டியதும், அதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. ஆனாலும் அதன்பின் அறிவு என்றால் என்ன? தீர்ந்த அறிஞன் என்பவர் யார்? என்ற வாதங்கள் என் மனதில் எழுந்தன. அதனால் சிறந்த அறிவுடையோர் என்று கருதப்பட்ட சிலரைச் சந்தித்து, அவர்களுடன் இந்தப் பொருள்களைப் பற்றி விவாதித்தேன் ஒவ்வொருவரும் தன் அறிவுத்திறனைப்பற்றி போடும் மதிப்பீட்டில் எவ்வளவு குற்றங் குறைகள் இருக்கின்றனவென்பது எனக்குத் தெரிந்தது. மற்றவர்களைப்போலவே, நானும் முழு அறிவை அடைந்தவனல்ல என்ற போதிலும், அறியாததை அறிந்தது போலக் காட்டிக்கொள்ளும் விதத்திலிருந்து நான் விலகினேன். ஆனாலும் நான் மற்றவர்களுடன் நடத்திய உரையாடல்கள், ஒவ்வொருவருக்கும் தெரியாத பலவற்றைக் காட்டியதால் எனக்குப் பல எதிரிகள் உண்டாயினர்."

(ஏதன்ஸ் நகர இளைஞர்களின் மனதைக் கெடுப்பதாகச் சாக்ரடீசின் மீது வந்த குற்றச்சாட்டுக்கு, பிறர்க்குச் சொல்வது கெடுதலா? எத்தகைய கருத்துக்களைச் சொன்னேன்? இளைஞர்களின் மனதைப் பாதுகாக்க யார் தகுதியானவர்கள்? என்று சாக்ரடீஸ் மிக விளக்கமாகக் கூறியபின் மேலும் தனது வாதத்தில் தொடர்ந்து சொன்னார்)

"மெலிடஸ் என்மீது தொடரும் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமேயில்லை. எனவே

Regd. No. M 6296

"மன்றம்" வெளியீடுகள்

—★★★—

கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்

—இரா. நெடுஞ்செழியன் M. A. விலை ரூ. 0—12—0

ராஜாதி ராஜா!

இரா. செழியன் M. A. விலை ரூ. 0—12—0

பொது அறிவு

—இரா. செழியன் M. A. விலை ரூ. 0—8—0

மறைந்த திராவிடம்

—இரா. நெடுஞ்செழியன் M. A. விலை ரூ. 0—3—0

- ரூ. 10-க்குமேல் வாங்குவோர்க்கே விற்பனைக் கழிவு
- விற்பனைக் கழிவு 25 சதவிகிதம்.
- முன்பணம் அனுப்புவோர்க்கே புத்தக அஞ்சலில் அனுப்பிவைக்கப்படும்.
- வி. பி. யில் வேண்டுவோர் வி. பி. கட்டணம் தனியே செலுத்தவேண்டும்.

விவரங்கட்கு :— நிர்வாகி. "மன்றம்"

26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை 1.

வெளிநாடுகளில் "மன்றம்" விற்பனையாளர்கள்.

யாழ்ப்பாணம்:

கே. இராமசாமி,
தமிழ்ப் பண்ணை,
யாழ்ப்பாணம்.

மலேயா:

திராவிட புக் எம்போரியம்,
புத்தக விற்பனையாளர்,
114. செராங்கூன் ரோடு, சிங்கப்பூர்.

தென் இலங்கை:

எஸ். எம். மோன்னு முகமது.
நியூஸ் ஏஜண்ட் & புத்தக விற்பனையாளர்,
77, இரண்டாவது குறுக்குத் தெரு,
கொழும்பு—11

பர்மா:

அன்பன் நூல் நிலையம்.
...யாளர்,

Edited, Printed and Published by V. ... NCHEZHIYAN M. A., at MANRAM ACHAKAM at 26, Nainiapp... ..., Mannadi, MADRAS-1.